# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. VI Issue 9 December 2016

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்


பக்கம்

லைப் டிவைன் . . . . . . . . . . . . . 4

இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . 12

சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . 13

யோக வாழ்க்கை விளக்கம். . . . . . 15

பூரணயோகம் - முதல் வாயில்கள் 18

அஜெண்டா . . . . . . . . . . . . . . . 20

**The Life Divine – Outline** . . . . . . 22

அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . 25

நெஞ்சுக்குரிய நினைவுகள் . . . . . 29

அன்பர் அனுபவம் . . . . . . . . . . . 32

**அன்னை இலக்கியம்**

மீன்கொடி. . . . . . . . . . . . . . . . . 34

எம்.எஸ் பிறந்தார். . . . . . . . . . . . 46


(முன், பின் அட்டைகளைச் சேர்த்து மொத்தம் 68 பக்கங்கள்)

*ஜீவியத்தின் ஓசை*

**யோசனை**

**எழும்வரை**

**சந்தோஷமில்லை.**

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

**அறிவிப்பு**

டிசம்பர் 2016 இதழுடன் சந்தா முடிவடையும் சந்தாதாரர்கள் உடனடியாக சந்தாவினைப் புதுப்பிக்க வேண்டுகிறோம்.

## ஸ்ரீ அரவிந்தம்

# லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆங்கிலம்: லெஸ்லி ஜேக்கப்ஸ்

தமிழாக்கம்: வித்யா ரங்கன்

## II/1. Indeterminates, Cosmic Determinations and the Indeterminable

Page 306

Para 11

An approach from material end of Existence cannot give us any certitude of validity for this hypothesis.

Also for any other explanation of Nature and her procedure.

The veil cast by the original Inconscience is too thick for the Mind to pierce.

Behind this veil is hidden the secret origination of what is manifested.

There are seated the truths and powers appearing to us as Nature.

They underlie the processes of that material front of Nature.

We want to know with greater certitude.

For that, we must follow the curve of evolving consciousness.



## II/1. பிரபஞ்ச சிருஷ்டி பிரம்ம சிருஷ்டி

ஜடம் எனும் முனையிலிருந்து நெருங்கினால் இந்த அனுமானம் ஏற்புடையது என்று உறுதி செய்ய முடியாது.

இயற்கை மற்றும் அதன் செயல்பாட்டின் வேறு எந்த விளக்கத்திற்கும் அது உறுதிப்பாடு அளிக்க முடியாது.

மூலமான ஜட இருளால் எழுப்பப்பட்ட திரை மனத்தால் ஊடுருவ முடியாத அளவு தடிப்பானது.

வெளிப்பட்டுள்ளவைகளின் ரகசியத் தோற்றுவாய் இத்திரைக்குப் பின் மறைந்துள்ளது.

அங்கு வீற்றிருக்கும் சத்தியங்கள் மற்றும் சக்திகள் நமக்கு இயற்கையாகத் தோற்றமளிக்கின்றன.

இயற்கையின் ஜடத்தோற்றச் செய்முறைகளின் அடிப்படையாக அவை அமைகின்றன.

நாம் இவற்றை மிக உயர்ந்த உறுதிப்பாட்டுடன் அறிய விரும்புகிறோம்.

அதற்கு நாம் பரிணாமம் பெறும் ஜீவியத்தின் வளைகோட்டைப் பின்பற்ற வேண்டும்.

It arrives at a height and largeness of self-enlightenment.

In that the primal secret is self-discovered.

For presumably it must evolve.

It must eventually bring out what was held from the beginning.

It was held by the occult original Consciousness in things.

It is a gradual manifestation of that Consciousness.

In Life it would be clearly hopeless to seek for the truth.

For Life begins with a formulation in which consciousness is still submental.

Therefore to us as mental beings, it appears as inconscient.

Our own investigation cannot be more fruitful of the secret truth .

Even when mind develops in life, its first aspect is a mentality.

It is involved in action, in vital physical needs, in impulses, desires.

It is unable to stand back from these things and observe and know them.



அது உயர்ந்தும் பக்கவாட்டிலும் பெருகும் சுய ஞானத்தை அடையும்.

அதில் ஆதியான ரகசியம் சுயமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நம் ஊகத்தின்படி அது பரிணாமம் பெற வேண்டும்.

ஆரம்பத்திலிருந்து மறைந்துள்ளதை அது வெளிக்கொணர வேண்டும்.

மூலமான நுண்ணிய ஜீவியத்தால் பொருட்களில் அது மறைக்கப்பட்டுள்ளது.

அது ஜீவியத்தின் படிப்படியான வெளிப்பாடு.

வாழ்வில் சத்தியத்தை நாடுவது என்பது நிச்சயமாக நம் நம்பிக்கையைத் தகர்க்கும் ஒரு செயல்.

ஏனெனில் வாழ்வு அதன் படைப்பைத் தொடங்கும் பொழுது ஜீவியம் மனத்தினுள் ஆழ்ந்து உள்ளது.

ஆகவே, மனத்தால் செயல்படும் மனிதனுக்கு அது ஜட இருளாகக் காட்சியளிக்கிறது.

நம் சொந்த ஆராய்ச்சி அந்த ரகசியமான சத்தியத்தை அறிய உதவாது.

மனம் வாழ்வில் வளர்ச்சி பெறும் போது அதன் முதல் அம்சம் மனப்பான்மை.

அது செயல், உணர்வு மற்றும் உடலின் தேவைகள், உத்வேகம், ஆசைகள் இவற்றில் ஆழ்ந்துள்ளது.

அவற்றிலிருந்து பிரிந்து நின்று அவற்றைக் கண்காணிக்க மற்றும் அறிய அதனால் இயலவில்லை.

In the human mind there is the first hope of understanding.

There is hope of discovery, a free comprehension.

Here we might be coming to self-knowledge and world-knowledge.

But in fact our mind can at first only observe facts and processes.

For the rest it has to make deductions and inferences.

It has to construct hypotheses, to reason, to speculate.

To discover the secret of Consciousness it would have to know itself.

It would have to determine the reality of its own being.

But the emerging Consciousness in animal life is involved in vital action and movement.

Our mind-consciousness is involved in its own whirl of thoughts.

That is an activity in which it is carried on without rest.

In that its very speculations are determined by its own temperament.

They are determined by its turn, past formation and line of energy.



மனித மனத்தில் புரிந்து அறியும் திறனுக்கான முதல் ஆர்வம் உள்ளது.

அங்குக் கண்டுபிடிக்கும் ஆர்வம் மற்றும் சுதந்திரமாக அறியும் சக்தி உண்டு.

இங்கு நாம் சுய ஞானம் மற்றும் உலக ஞானத்தை அடையலாம்.

ஆனால் உண்மையில் நம் மனம் முதலில் நிகழ்பாடுகள் மற்றும் செய்முறைகளை மட்டுமே பார்க்க முடியும்.

பிறவற்றை அது பகுத்தறிகிறது மற்றும் ஊகித்தறிகிறது.

பகுத்தறிய, ஊகித்தறிய அது அனுமானங்களை எழுப்ப வேண்டியுள்ளது.

ஜீவியத்தின் ரகசியத்தைக் கண்டறிய அதற்கு தன்னையறிவது அவசியமாகிறது.

அது தன் சொந்த ஜீவனின் சத்தியத்தை நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

விலங்கு வாழ்வில் வெளிப்படும் ஜீவியம் உணர்வின் செயல் மற்றும் உணர்வின் இயக்கத்தில் புதைந்துள்ளது.

அது போல் மனிதனின் ஜீவியம் அவனது சொந்த எண்ணச் சுழல்களில் ஆழ்ந்துள்ளது.

அச்செயலில் ஜீவியம் ஓய்வின்றித் தொடர்கிறது.

அதில் அதன் சிந்தனை அதன் சொந்த மனப்போக்கால் நிர்ணயிக்கப்படுகிறது.

அவை அதன் திருப்பம், கடந்த கால உருவாக்கம் மற்றும் சக்தி செயல்படும் வழி இவற்றால்  நிர்ணயிக்கப்படுகிறது.

They are determined by inclination, an inborn natural selection.

We do not freely determine our thinking according to the truth of things.

It is determined for us by our nature.

We can indeed stand back with a certain detachment.

We can observe the workings of the mental Energy in us.

But it is still only its process that we see.

It is not any original source of our mental determinations.

We can build theories and hypotheses of the process of Mind.

But a veil is still there over the inner secret of ourselves, our consciousness, our total nature.

Contd...

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பூரண யோகத்தில் தியானம் இரண்டாம் பட்சமான இடத்தைப் பெறுகிறது. ஒரு மணி தியானம் செய்து அதில் கிடைத்த தெய்வவுணர்வைத் தன் அன்றாடச் செயலில் (தன்னை விலக்கி) வெளிப்படுத்தினால், மனித சுபாவம் அதன் தன்மையை இழந்து தெய்வ சுபாவமாக மாறும். அதனால் “செய்யும் வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வேலைகளைச் செய்வதால், தியானத்தைவிட அதிக யோகப் பலனைப் பெறலாம்” என அன்னை கூறுகிறார்.



அவை பிறப்பால் அமையப் பெற்ற இயல்புக்குரிய விருப்பத் தேர்வால் நிர்ணயிக்கப்படுகின்றன.

நாம் நம் எண்ணத்தை விஷயங்களில் பொதிந்துள்ள சத்தியத்தின்படி சுதந்திரமாக நிர்ணயிப்பதில்லை.

நம் குணத்தால் நாம் அதை நிர்ணயிக்கிறோம்.

உண்மையில் பற்றற்ற நிலையில் நம்மால் விஷயங்களிலிருந்து ஒதுங்கி நிற்க முடியும்.

நம் மனோசக்தியின் செயல்பாடுகளை நாம் பார்வையிட முடியும்.

இருந்தாலும் நாம் பார்ப்பது அவற்றின் செயல்முறைகளை மட்டுமே.

நம் மனத்தின் தீர்மானங்களுக்கான மூல உற்பத்தி ஸ்தானத்தை அல்ல.

மனத்தின் செயல்முறைகளைப் பற்றிய கொள்கைகள் மற்றும் அனுமானங்களை நாம் எழுப்ப முடியும்.

ஆனால், நம் அகத்தின் ரகசியம், நம் ஜீவியம் மற்றும் நம் முழு இயல்பின்மேல் திரை இன்னும் உள்ளது.

தொடரும்...

### ஸ்ரீ அரவிந்த சுடர்

‘மௌனம்’ என்பது பெரிது. யோகியின் எந்தப் பகுதி மௌனத்தைப் பெறுகிறதோ, அதற்குத் தகுந்த திறனுடன் அது செயல்படும். மனம் மௌனமானால் அதன் திறன் ஒன்று; ஆத்மா மௌனத்தால் சூழப்பெற்றால், அதன் திறன் வேறு. மனத்தில் லயித்த மௌனம் ஜீவனில் ஆழ்ந்து உயிரையும் தொட்டால் அதன் திறன் அதிகம். ஸ்ரீ அரவிந்தர் பெற்ற மௌனம் மனத்தின் ஆறு நிலைகளையும் தாண்டி பரம்பொருளில் உறையும் மௌனமாகும்.

## இம்மாதச் செய்தி

**சின்ன புத்தியை ஆண்டவனாகக் காண்பவனே அத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.**





**Page 191: Accepted by her mighty loneliness.**

*வலிமை நிறைந்து தனித்து வந்ததை ஏற்று*

- ✡ அவளுடன் நிஷ்டையின் சிகரத்தில் நின்றான்
- ✡ ஜீவனையும் வாழ்வையும் புனிதமாக்கும் சிகரங்கள்
- ✡ கடந்துறையும் சத்தியத்திற்கு அவை அர்ப்பணம் செய்யப்பட்டன
- ✡ அனந்தத்துள் அவள் இவ்வழி அவிழ்த்து விடப்பட்டாள்
- ✡ படம் எடுத்த கழுகுகள் தரும் முக்கியத்துவம்
- ✡ எண்ணத்தின் தூதுவன் பிரம்மத்தை நாடிப் போகிறான்
- ✡ ஆத்ம திருஷ்டியும் ஆத்ம புலனும் ஐக்கியத்தால் ஏற்கும்
- ✡ வீட்டினுள் நுழைவதைப் போல் அவள் ஆழத்துள் புகுந்து
- ✡ அவள் அடைய விரும்பிய அனைத்தையும் அவன் அடைந்தான்
- ✡ அவள் எண்ணத்தால் சிந்தித்து, அவள் சுவட்டால் யாத்திரையை ஏற்று
- ✡ அவள் மூச்சில் வாழ்ந்து, அவள் பார்வையால் பரீட்சித்து
- ✡ அவள் ஆத்ம இரகஸ்யத்தை அறிய விழைந்து
- ✡ கண்ட காட்சியால் ஆக்ரமிக்கப்பட்டு
- ✡ அவள் ஆடம்பர ஆட்டத்தை அவன் வியந்து புகழ்ந்தான்
- ✡ அவள் மென்மையான கலையின் அதிகபட்ச அற்புதம்
- ✡ வலிந்த அவள் குரல் கேட்டுப் புல்லரித்து
- ✡ அவள் வலிமையின் மாயங்களைத் தீவிர உணர்வுடன் தாங்கி

- ✡ புதிரான அவள் முடிவு படீரென அவன் மீது விழுந்ததையறிந்து
- ✡ விதியைக் கடைந்தெடுக்கும் அவள் கைகள் அவற்றின் வலிய பிடியில்
- ✡ அவள் தொட்டு நகர்ந்தான், அவள் சக்தி பிடித்து ஓட்டுகிறது
- ✡ உள்ளே அவள் ஆத்ம அழுகையையும் அவன் கண்டான்
- ✡ தொட்டு அழியும் சக்தியைப் பிடிக்க முயன்று தோற்று
- ✡ அவள் நம்பிக்கையான நிதானமான பார்வை ஏமாற்றத்துடன் கலந்து
- ✡ ஆர்வமுள்ள அவளுறுப்புகளைப் பற்றியணைத்த அவன் பாசத்தீவிரம்
- ✡ விம்மும் மார்பின் சிரமமும் உணர்ச்சியின் எழுச்சியும்
- ✡ திருப்தியற்ற பலனுடன் போராடும் அவள் மனம்
- ✡ அவள் பிடிக்கும் தவறும் பிரியமான காந்தன்
- ✡ திரையிட்டும் தேடும் சக்தியை அவன் சந்தித்தான்
- ✡ கடத்தப்பட்ட தெய்வம் கட்டும் கற்பனை மோட்சம்
- ✡ மாயச்சிலை மறைந்த சூரியனை நிமிர்ந்து நோக்கிற்று
- ✡ அவள் ரூபத்தில் எப்பொழுதும் அவன் கண்ட ஆத்மா
- ✡ அமைதியாய் அருகிலிருப்பது அவள் சுபாவத்தின் வலிமை
- ✡ தோன்றுமிடமெல்லாம் தோன்றாதவளைக் கண்டான்
- ✡ பூவுலகிலும் ஆத்மா வாழ்வின் இரகஸ்யம்



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/36. புரிவது சமர்ப்பணமானால் புரியாமல் திருஷ்டி எழும்.

- புரிவது சிந்தனை, சிந்தனை பிரிக்கும். புரிவது சமர்ப்பண-மாவது எனில் சிந்தனை நிற்பது. சிந்தனை தானே நிற்பது மௌனம் கனத்து திருஷ்டியாவது.
- திருஷ்டி ஜோதி, ஜோதி திருஷ்டி.
- நினைவு, சிந்தனை, புரிவது, மௌனம், திருஷ்டி ஆகியவை அடுத்தடுத்த கட்டங்கள்.
- கேட்பது, கவனிப்பது, புரிவது, ஏற்பது, தெளிவு - **Hearing listening, understanding, accepting, clarity** - என்பவை கேட்பதன் அடுக்கடுக்கான பகுதிகள்.
- கேட்பதைப் பிரிப்பதைப் போல் மற்ற அனைத்தையும் பிரித்தறியலாம். ஆனால் சிரமம்.
- கேட்பது போன்ற ஒரு விஷயத்தை அதிகபட்சம் பிரித்து அறிந்தால், அது சமர்ப்பணம் அடுத்த கட்டம் கொண்டு போவது போல் பயன் தரும்.
- **Bliss** அசையாத ஆனந்தம், **Delight** அசையும் ஆனந்தமாவது பரிணாமத்தின் உயர்ந்த நிலை.
- உடலுழைப்பு, ஆர்வமாகச் செயல்படுதல், நினைவால் சிந்தனை அறிவு பெறுதல் ஆகியவை அனுபவத்தால் இணைந்து, இழைந்து, உருகி உள்ளுணர்ந்து, கனத்து உயர்ந்து பக்குவமாகும். *ஒரு வகையில் இது நினைவின் தவமாகும்.*
- இந்த அனுபவம் உடலுக்கும், உயிருக்கும், மனத்திற்கும், சத்திய ஜீவியத்திற்கும், ஆத்மாவுக்கும் உண்டு.

- தனிமனித ஆத்மா உலகின் ஆத்மாவில் அணுவான பகுதி.
- மரபு மோட்சம் நாடுவது தனி மனித ஆத்மா மனம், உயிர், உடலினின்று விடுதலை பெறுவது.
- *ஸ்ரீ அரவிந்தம் ஆத்மாவின் பரிணாமம். திருவுருமாற்றம் எனக் கூறுவது*, உலகின் ஆத்மா பரிணாம வளர்ச்சியால் **Bliss Delight** ஆகும் பொழுது அதை ஒவ்வொரு ஆத்மாவுக்கும் தருவது.
- ஒரு மனிதனின் உயர்வு உலகை மாற்றும் என்ற சாவித்ரி வாக்கியம் கூறுவது.
- ஆத்மாவில் ஆனந்தத்தில் நடக்கும் இம்மாறுதல் உடலில் **(technology)** வசதி பெறுவது நாகரிக முன்னேற்றம்.
- நாகரிகம் உடலிலும், உயிரிலும், மனத்திலும், ஆத்மாவிலும் வளர்கிறது.
- உணவின் தரம் உயர்ந்ததும், உணவைப் பெற முயற்சி குறைந்து மறைவதும் ஒரு உதாரணம்.
- ஆதி மனிதன் காட்டுமிராண்டி.
- அவனுக்குப் பலஹீனமான எதிரியைக் கண்டால் கொண்டாட்டம். அவனை மிரட்டுவான், அடிப்பான். கொலை செய்வான். *கொலை செய்து ஆனந்தப்பட்டு கொண்டாடி கொக்கரிப்பான்.*
- இன்று ஆபத்திலுள்ளவனுக்குப் பிறர் உதவுவது சகஜம்.
- டெல்லியில் அடிபட்ட டாக்டர் ஆறு மணி கவனிப்பாரற்றுக் கிடந்தது பழைய காட்டுமிராண்டி மனநிலை இன்றும் நிலவ போலீஸ் பழக்கம் உதவுகிறது என்பதைக் காட்டுகிறது.
- போலீஸ் தான் செய்ய வேண்டிய உதவியை ஒருவர் செய்தால் அவர்களைக் குற்றவாளியாக்கும் மனப்போக்குடையதாக இருப்பதால் உதவ வேண்டிய கருவி உபத்திரவமாகும் விபரீதம் ஏற்படுகிறது.



- பணம் உலகை நாகரிகமாக்கும் கருவி. அது இன்று மனிதனுக்கு ஏராளமான பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது.
- *உதவி உபத்திரவமாவது உலகம் வழங்கும் நியாயம்.*
- பிள்ளைகளையும் தாயாரையும் காப்பாற்ற வேண்டிய தகப்பன் அவர்களை ஆபத்தில் விற்றுச் சாப்பிடுகிறான்.
- மிக உயர்ந்தது சற்று தாழ்ந்தால் எதிராக மாறும் இரஸவாதம் உலகத்திற்குரியது என்று பகவான் கூறுகிறார்.
- பிள்ளைகள் தகப்பனாருக்கு எதிராகவுமிருப்பர் என்பது மனித சுபாவம்.
- இந்திரா நேருவுக்கு எதிராக - முழுக்க முழுக்க எதிராக - நடந்து நேரு தலைமுறைக்கு முடிவு கட்டினார்.
- இது அடுத்த தலைமுறை செயல்படும் வகைகளில் ஒன்று.
- **FDR**, **Churchill**, **Stalin,** காந்திஜியின் வாரிசுகள் உள்ள இடம் தெரியவில்லை.
- பேரும் புகழும் உலகளவில் ஒரு நூற்றாண்டில் பெறாத புகழாக ஆனபின் அடுத்த தலைமுறை இருந்த இடம் தெரியாமல் போவது, *மனித சுபாவம் எதிர்முனையில் அடுத்த தலைமுறையில் வளர்வது.*

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தவப் பலன், யோக சித்தி ஆகியவற்றை அடையாதவர்கள், அத்தனையும் தம்மிடம் இருப்பது போல் போலியாக நடித்து ஏமாற்ற முயற்சி செய்வதுண்டு. அதில் அவர்கள் வெற்றியும் பெறுவதுண்டு. "பூரண யோக சித்தியான (Supramental Realisation) சத்திய லோக சித்தியை, அது போல் ஏமாற்றுவதற்குக்கூட நடித்துக் காட்ட முடியாது" என்று அன்னை கூறுகிறார்.

## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 131. தீராத வியாதி நெடுநாளிருந்து தானே மறைவது.

- ஓடீமா (கால்வீக்கம்) யானைக்கால், தோல் வறண்டது, நீர் சுருக்கு, மாதாந்திர மயக்கம், கண் பூ போன்றவை அப்படி மறைந்துள்ளன.
- *'மனிதன் தன் வியாதி குணமாவதை விரும்பமாட்டான்' என்ற ஆன்மிக உண்மையை மனம் ஏற்காது.*
- மனமும் ஆன்மாவும் நம் பிரச்சனைகளை ஆழ்ந்து விரும்புகின்றன என்பது பகவான் கூறியது.
- *மனம் ஒரு வியாதியை மறந்தால் அருள் அதை அழிக்க ஆரம்பிக்கும்.*
- அப்படி அது மறைந்தால் அவர் அருளைத் தன்னையறியாமல் பெறுவதால் அவருக்குப் பூரண யோகம் பலிக்கும்.
- தத்துவப்படி அனைவருக்கும் உரியது யோகம். சில அடையாளங்கள் அதை எடுத்துக் கூறுகின்றன.
- வாழ்வில் அனைத்தும் அடையாளமே, அனைவருக்கும் யோகமுண்டு.
- அரசியலில் ஜனாதிபதி பதவி அனைவருக்கும் உண்டு.
- **MLA, MP** பதவி நாடி வருவது அவருக்கு அது பலிக்கும் அடையாளங்கள்.
- சிறுவர்கள் பலர் விளையாடுமிடங்களில் ஒருவன் தலைமை வகிப்பான். அவன் எதிர்காலத் தலைவன்.
- தலைமை, திறமை, தெளிவு, பணம், கட்டுப்பாடு போன்றவை எதிர்காலத்தில் வரும் ஏற்றத்தை எடுத்துக்காட்டும்.



- *அடக்கம் பெரும் தலைமைக்கு அடையாளம்.*
- பிறந்தவுடன் ஜாதகம் எதிர்காலத்தில் ஜாதகன் வைஸ்ராயாக வருவான் உலகத் தலைவனாவான், பிரதமராவான் எனக் கூறும்.
- அகால மரணம் அன்பருக்கில்லை. ஜாதகம் கூறினாலும் இல்லை. மரணத்திற்கு எதிரான அன்னை கருத்தை - கர்மம் அழியும் - அன்பர் ஏற்றால், வாழ்வு குறுகிய நிலையிலிருந்து விரிவுபடும் கருத்தை ஏற்றால் அகால மரணம் மறையும். காலமே அன்பருக்கில்லை எனில் அகாலம் அவருக்கில்லை. *பெற்றோர், பிள்ளைகள், தம்பதிகளும் அவரைக் காப்பாற்ற முடியும்*. வழக்கமான அசிரத்தை கர்மத்தை செயல்படச் செய்யும். அதற்கெதிரான அன்புடைய கவனம் அதற்கு மாற்று. அன்பர்கள் தங்கள் வாழ்வையே அப்படிக் கவனிப்பதில்லை. *முதல் மார்க் வாங்கக்கூடிய பையன் 60 மார்க்குடன் முடிப்பதை அவனே அறியான்*. அவன் முயன்று முதல் மார்க் வாங்கினால் ஆயுள் அவனுக்கு நீடிக்கும். 3 முறை பிரம்மாண்ட வாய்ப்பை இழந்து உள்ளதையும் இழந்தவருக்கு மீண்டும் அதை பெற்றுத்தந்த பின்னும் உதவியவருக்கு உபத்திரவம் கொடுப்பது மனித சுபாவம். நாய் பேச விரும்பினால் குரைக்கும். நாய்க்குப் பேச வராது. மனிதனுக்கு நன்றி எழுவதில்லை.

#### ஜீவிய மணி

*மனிதன் பணத்தை நம்பி வாழ்கிறான். அல்லது செல்வாக்கை நம்புகிறான். அல்லது சொந்தத் திறமையை நம்பிச் செயல்படுகிறான். நம் உயர்ந்த நம்பிக்கை எதில் இருக்கிறதோ, அதற்குப் பதிலாக அன்னையை அந்த இடத்தில் பிரதிஷ்டை செய்து அன்னையை நம்புவதைக் கற்றுக்கொண்டால் யோகம் பலிக்க உதவும். வாழ்க்கை பலிக்கவும் அது மூல மந்திரம்.*

## பூர்வ ஜென்ம ஞானம் மூலத்தையடைந்தால் தெரியும்

- பூர்வ ஜென்ம ஞானம் காலத்தைக் கடந்தது.
- காலத்தைக் கடந்ததுடன் ஜட உலகைக் கடந்த சூட்சும உலகுக்குரியது.
- மேல் மனம் ஜடமானாலும், அதற்கும் சூட்சுமம் உண்டு. அது உள் மன சூட்சுமமாகாது.
- சூட்சுமம் மேல் மனம், உள் மனம், அடி மனம், ஆழ் மனம், பாதாளம், ஜட இருளுக்குண்டு.
- தன் பூர்வ ஜென்மம் தெரிவது, பிறர் பூர்வ ஜென்மம் தெரிவது, எதிர்காலம் தெரிவது.
- உலகில் கடந்த காலம், எதிர்காலம் தெரிவது படிப்படியான உயரங்கள்.
- *இந்திய ஆன்மிக மக்கள் பலர் இந்திய சுதந்திரம் போரில்லாமல் வரும் என்றனர்.*
- காலன் அழிவான் என்பதை இதுவரை எவரும் கூறியதாக எனக்கு ஞாபகமில்லை.
- வடலூர் கடலூராகும் என வள்ளலார் கூறியது வடலூர் மண்ணின் எதிர்காலம் அவருக்குத் தெரிந்திருக்கிறது.
- ஸ்ரீரங்கம் தேர்ச்சீலை எரிவதை திருமங்கை ஆழ்வார் சூட்சுமத்தில் கண்டார்.
- உத்தர யோகி வருவார், மூன்று பிரகடணங்களைக் கூறுவார் என்றது சூட்சுமம்.
- சங்கராச்சாரியார் எதிர்காலத்தை அவர் பிறக்கும்முன் அறிந்த கனவு சூட்சும ஞானம்.
- வ.ரா. அடுத்த ஆண்டு எப்படித் தோன்றுவார் என பகவான் கூறியதும், தாடியில்லாத குள்ள மனிதனை அன்னை உயரமான தாடியுடையவனாகக் கண்டதும் பூர்வ ஜென்ம ஞானம்.
- 30 ஆண்டிற்குப்பின் சர்க்கார் ரிக்கார்ட்டுகள் வெளிவருவதை நாம் அறிவது ஒரு வகையில் காலத்தினுள் "சூட்சுமம்" வெளிப்படுவதாகும்.
- மூலம் என்பது மரபுக்கு அக்ஷர பிரம்மம்.
- ஸ்ரீ அரவிந்தம் கூறும் மூலம் முழுப்பிரம்மம்.
- நாரதர் அஸ்வபதிக்குச் சாவித்ரியைப் பற்றிக் கூறியது எதிர்காலம். தெய்வீக மனம் பெற்ற சூட்சும ஞானம்.
- அனுசுயா திருமூர்த்திகளைக் குழந்தையாக்கியது **Supreme** பரநிலைக்குரிய சூட்சுமம்.
- மாடியில் க்ஷவரம் செய்து கொண்டிருந்த கணவன் வெட்டிக்கொண்டதைக் கீழேயிருந்த மனைவி "அறிந்து" வந்து விசாரிப்பது உடலின் சூட்சும ஞானம்.
- சைபீரியா பறவைகள் வேடந்தாங்கல் வந்து திரும்புவது **(instinct)** உள்ளுணர்வு பிறவியில் பெற்ற சூட்சுமம்.
- கடலூரில் 3 நாள் அன்னை பெயரை ஸ்மரித்தவர் பெயரை 10 கார்டுகளுடன் அன்னையிடம் எடுத்துச் சென்ற சாதகர் அன்னை அவற்றைப் பெறாமல் கார்டுகளைத் தள்ளி அவர் பெயரை எடுத்து **March** 25, மாலை 3 மணி என எழுதியது அழைப்பின் சூட்சுமம். அது அன்னை காதில் விழுகிறது.
- ஓடிப்போன பையனைப் பற்றி அன்னையிடம் கூறியபின் பையன் திரும்பி வந்தான். வந்தவன் "வா வீட்டுக்கு வா" எனக் குரல் கேட்டு வந்தேன் என்றான். *அன்னை ஜீவியம் குரலாக எழுந்து கூப்பிடவல்லது.*
- சாவித்ரி எதிர்காலத்தைக் காட்டுவது அன்னை ஜீவியத்தின் சூட்சும சூழல்.

### ஜீவிய மணி

*கவலையின் சுவடுள்ளவர்க்குக் காரிய சித்தி இல்லை.*

# The Life Divine – Outline
## தமிழ்

(சென்ற இதழின் தொடர்ச்சி) கர்மயோகி

### BOOK II - Part 2
### ஞானமும் ஆன்மீகப் பரிணாமமும்

ஞானம் அஞ்ஞானத்திலிருந்து வெளிவந்தபின் ஆன்மா ஞானத்திலிருந்து வெளி வருகிறது.

இப்பகுதியில் 14 அத்தியாயங்கள் உள. முதல் அத்தியாயம் **(Chapter 15)** பூரண ஞானமும் சத்தியமும் என்பது. மரபு பரமாத்மாவை முடிவாகக் கருதி பரமாத்மா பிரம்மத்தில் சேர்வதுடன் மோட்சத்தை முடித்து விடுகிறார்கள். பகவான் ஸ்ரீ அரவிந்தர் மரபு கூறும் அக்ஷர பிரம்மத்தைக் கடந்த முழு பிரம்மத்தை முடிவாகக் கருதுகிறார். இந்த அத்தியாத்தில் ஜீவாத்மாவோ, பரமாத்மாவோ முடிவல்ல, *இரண்டையும் தன்னுட்கொண்ட முழுப் பிரம்மமே முடிவு என்று கூறுகிறார்.* (*அக்ஷர பிரம்மம், க்ஷர பிரம்மம் இரண்டும் சேர்ந்தது முழுப் பிரம்மம்*). இதைப் படித்து அறிய முடியாது. யோகம் பயின்று அகந்தை அழிந்து பெற வேண்டிய சித்தியிது, ஞானமில்லை.

**(Chapter 16)** இரண்டாம் அத்தியாயம் வாழ்வு. நம் இலட்சியம் தெய்வீக வாழ்வு. முழுப் பிரம்மத்தை அடைந்தாலும் இந்த யோகத்திற்கு அதுவும் முடிவல்ல. அதற்கு மேல் அம்முழுப்-பிரம்மம் வாழ்வில் வெளிப்பட வேண்டும். அத்துடனும் யோகம் முடியாது. வாழ்வில் முழுப் பிரம்மம் வெளிப்பட்ட பின்னரே பாதாளத்திலுள்ள தீமையைத் தீண்ட முடியும். பாதாளம் மனிதனுக்குக் கட்டுப்பட்டதல்ல. பரமாத்மாவுக்குக் கட்டுப்படும். பாதாளமும் பரமாத்மாவும் மனிதனில் இணைவது மனிதன் தன் இலட்சியக் கடமையை நிறைவேற்றுவதாகும். இக்கருத்து **(Chapter 16)** இப்பகுதியின் மூன்றாம் அத்தியாயத்தில் கூறப்படுகிறது. **Chapter 17**-இல் இதைத் தொடர்ந்து அப்படி இணைந்த பாதாளமும் பரமாத்மாவும் உயர்ந்து, திருவுருமாறி, பிரம்ம சத்தியத்துடன் இணைவது அடுத்த கட்டம் என விளக்கப்படுகிறது. அஞ்ஞானம் மனத்திலாரம்பித்து வாழ்வில் ஆழ்ந்து உடலில் செறிந்த இருளாகி அதன் கீழேயுள்ள ஜட இருளில் பூர்த்தியாகிறது. **Chapter 18**-இல் எழுவகை அஞ்ஞானம் திருவுருமாற்றத்தால் எழுவகை ஞானமாவதை விளக்குகிறார். இவ்வழியாக சிருஷ்டியில் உள்ள அஞ்ஞானம் பூரண ஞானமானபின் மனிதன் இதுவரை பெற்ற மாற்றங்கள் அனைத்தும் பிறப்புக்கும் இறப்புக்கும் இடையேயுள்ள வாழ்வுக்குரியது எனவும் *வாழ்வு பிறப்பிற்குமுன் ஆரம்பித்து இறப்பிற்குப்பின் தொடர்ந்து ஆதியும் அந்தமுமற்றது* எனவும் *காண்கிறான்*. பிரபஞ்சமே அந்த வாழ்வுக்குட்பட்டது. பிரபஞ்சமே பிரளயத்தில் அழிந்தாலும் இவ்வாழ்வு இருக்கும். இது மனத்தால் உலகில் சிருஷ்டிக்கப்பட்ட வாழ்வாகும். இதனுள் சூட்சும உலகம் உண்டு. கண்ணுக்குத் தெரியாத ஆவி லோகங்கள் ஆத்ம லோகங்கள் உள்ளன. மரணத்திற்குப்பின் மனித வாழ்வு விரிந்து பரந்து இவ்வுலகில் பரவுகிறது. இக்கருத்துகள் **Chapter 19**-இல் விளக்கப்படுகின்றன. ஆத்மா உடலிலிருந்தும் மனத்திலிருந்தும் விடுபட்டு இந்த ஜென்மத்தில் பெற்ற அனுபவங்களையும், அதன் சாரங்களையும் முழுவதும் கிரகிக்க ஓய்வு பெற விரும்பி தனக்குரிய இடத்தை சூட்சும உலகில் கண்டு அமைதியுறும் **(Chapter 20)**. ஆத்மா பரிணாமத்தால் வளர்ந்து மறுபிறப்புக்கு தயாராகும்வரை இந்நிகழ்ச்சி தொடரும். *அந்த சூட்சும லோக அனுபவம் ஆத்மாவுக்கு இரண்டு பெரிய சித்திகளைத் தருகின்றது. அது அமர வாழ்வின் அம்சங்கள்.* அவை **(Chapter 21)** 1. ஆத்மா பிரம்மத்தைப் பிறப்பு, இறப்பு இல்லாத லோகத்தில் அறிகிறது. 2. அதே போல் சிருஷ்டியைக் கடந்த லோகத்தில் பிரம்மத்தை ஆத்மா அறிகிறது. இதுவே வேத ரிஷிகள் பெற்ற மோட்சம். இவ்வாத்மானு-பவங்களுடன் மறுபிறப்பு எய்தியபின் மனிதனாகிறான். அவன் ஆத்மா உள்ளே தொடர்ந்து பரிணாம வளர்ச்சி பெறும்பொழுது அம்மாறுதலுக்கேற்ப அவன் மனமும், உயிரும் திருவுருமாற்றம் அடைகின்றன. *தொடர்ந்த திருவுருமாற்றம் இப்பிறப்பில் முடியாது. அது முடிய உடலும் திருவுருமாற வேண்டும்* **(Chapter 22)**. இவ்வழியாக நாமறிந்த மனிதன் ஆன்மிக மனிதனாக அதே உடலில் ஜனிக்கிறான் **(Chapter 23)**. அவனது ஆத்மா பிரபஞ்சம்

முழுவதும் பரவும்பொழுது அவன் ஆன்மிக மனிதனாகிறான் (Chapter 24). இவனால் அடுத்தவருக்குத் தான் பெற்ற ஆன்மிகப் பலனைத் தர முடியும். இந்த யோகம் திருவுருமாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட யோகம். அவை மூன்று திருவுருமாற்றங்கள்; சைத்தியத் திருவுருமாற்றம், ஆன்மிகத் திருவுருமாற்றம், சத்திய ஜீவியத் திருவுருமாற்றம். அவற்றைக் கூறுவது அடுத்த 25-ஆம் அத்தியாயம். இது பூர்த்தி பெற நேரடியாக பிரம்மத்தை நாட முடியாது. அது பகுதி. அதாவது சிருஷ்டியின் கீழ்ப்பகுதியான பாதாளத்தை விலக்கிய மேல்பகுதி. கீழ் மேல் பகுதிகள் சேர்ந்த முழுமையே பூரண யோகத்திற்குரியது. இதற்கு உள்மனம் சென்று அங்கிருந்து அடிமனம் போய் அங்கு சைத்திய புருஷனை அடைந்து அவனை மேல் மனதிற்கும் அதற்கும் மேலேயுள்ள 4 ஆன்மிக மனங்கட்குமாக உயர்த்தினால் பொன் மூடியைக் கடந்து சத்திய ஜீவியத்தை அடையலாம் (Chapter 26). சத்திய ஜீவியத்தை அடைந்தால் மனிதன் சத்திய ஜீவனாவான் (Chapter 27). அவன் வாழ்வு தெய்வீக வாழ்வு (Chapter 28).

★★★

**தெய்வீக வாழ்வு - Chapter 28**

மனிதன் தன்னை மனம் என நம்புவது பரம்பரை. தான் மனமில்லை சத்திய ஜீவியம் என அறிவது ஸ்ரீ அரவிந்தம். சத்திய ஜீவியம் பிரபஞ்சம் முழுவதும் பரவிய ஞானமயமான சக்தி. பூரிதமான தன்னை பிரம்மாவாக உணர்ந்த ஜீவன். இதைத் திருவுருமாற்றம் பெற்றுத் தரும். அதற்குச் சரணாகதி அவசியம். அந்த வாழ்வு எளிமையானதாகவோ ஆடம்பரமானதாகவோ இருக்கலாம். இதை அடைந்தபின் பரிணாமம் அஞ்ஞானம் ஞானமாவதிலிருந்து மாறி *ஞானம் பெரிய ஞானமாகும் பாதையில் நுழைகிறது*. மனிதன் (Taste of Ignorance) அஞ்ஞான ரசனையில் திளைப்பதால் இந்த அற்புதம் அவனைச் சூழ்ந்திருந்தபோதிலும் அவன் மனத்தைத் தொடுவதில்லை.

(தொடரும்)



# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

விற்க நினைத்ததைப்போல் 3 மடங்கு விலைக்குப் பேரம் படிந்து, அக்ரிமெண்ட் பாதி எழுதியபின், தடை வந்தது. வந்த நல்ல விலை போய்விட்டது என்று கவலையடைந்தவர், ‘‘வந்தது போகாது. அதுவும் தரிசனம் மூலமாக வந்தது போகாது. முயன்றால் மீண்டும் கிடைக்கும். சமாதி தரிசனம் செய்தால் போதும்’’ என்ற எண்ணத்தை அவரால் ஏற்றுக்கொள்ள முடிந்தது. ஏற்றுக்கொண்டவுடன் தீராத கவலை மனதை விட்டு விலகியது; நம்பிக்கை ஒளி புறப்பட்டது. 4 மணி நேரத்தில் போனது திரும்பி வந்துவிட்டது. ஓர் உயர்ந்த கருத்தை அவரால் ஏற்றுக்கொள்ள முடிந்ததால் கவலையழிந்து, நம்பிக்கை ஏற்பட வழி ஏற்பட்டது. உயர்ந்த கருத்துக்கு அந்தத் திறனுண்டு.

டிபார்ட்மெண்டில் இரண்டு சான்ஸ் கொடுத்தும் அக்கௌண்ட் டெஸ்டில் தவறி, மேலும் இரு சான்ஸ் ஸ்பெஷலாக வாங்கி, அதிலும் பெயிலாகி, டிபார்ட்மெண்டிற்குத் தேவையான டெக்னிக்கல் பரீட்சையை இரு முறை எழுத, அதிலும் பெயிலானவர்க்கு, புதிய உத்தியோகத்தில் சேர்வதற்கு-முன் பழைய உத்தியோகத்தில் அதிக சம்பள உயர்வைச் சர்க்கார் ஏற்படுத்தியுள்ளார்கள் என்ற நிலையில், இக்கருத்தை ஏற்றால் பலனுண்டு என்று சொல்லியபொழுது, அவர் மிகவும் தயங்கினார். ‘‘வந்தது போகாது. அதுவும், ஸ்ரீ அரவிந்தர் அறையைத் தரிசனம் செய்தபின் வந்தது போகாது’’ என்ற கருத்தை அவர் ஏற்றுக்கொண்டால், 4 முறை பெயிலான அக்கௌண்ட் டெஸ்டை அடுத்தாற்போல் ஒரே முறையில் பாஸ் செய்ய முடியும். அடுத்த டெக்னிக்கல் டெஸ்டையும் ஒரே முறையில் பாஸ் செய்ய முடியும். அவரால் அந்த உயர்ந்த கருத்தை ஏற்றுக்கொள்ள முடிந்தது. இரண்டு பரீட்சைகளையும் பாஸ் பண்ண முடிந்தது. உயர்ந்த கருத்தை மனம்

ஏற்றுக்கொண்டால் கவலை கரையும்; நிம்மதி ஏற்படும்; பிரச்சனை தீரும்.

நல்ல சம்பளத்தையும், உத்தியோகத்தையும் விட்டுவிட்டுத் தொழில் (**industry**) ஆரம்பிக்க முயன்று, 6 வருஷ காலமாக உழன்றவர், கதிகலங்கிய நிலையில், இனி உருப்பட வழியே-யில்லை என்ற நிலையில், ‘‘நீ உன் காணிக்கையை இந்தக் கஷ்டக் காலத்திலும் தொடர்ந்து தருகிறாய்; குறைக்காமல் செலுத்துகிறாய். எது கை விட்டாலும் காணிக்கை தன் கடமையைப் பூர்த்தி செய்யும், கவலையை விடு’’ என்ற கருத்தை ஊன்றிக் கேட்ட அவரால் கண்ணீரைத் துடைத்துக்-கொண்டு அன்னையை நினைத்துச் சிரிக்கவும் முடிந்தது. 7 நாளில் 3 புதிய வாய்ப்புகள் உற்பத்தியாகி கைகொடுத்தன. கவலை போய், நிம்மதி வந்தது. அவரும் பெரிய தொழிலதிபராகி விட்டார்.

ஒரு தொழிலதிபருக்கு 3 தொழில்கள். எல்லாத் தொழில்களும் நல்ல முறையில் நடந்துவருகின்றன; ஆர்டருக்குக் குறைவில்லை; பணத் தட்டுப்பாடில்லை; உற்பத்தியில் தடையில்லை. தொழில் இலாபம் வருவதைப் பார்த்த தொழிலாளர்கள் வேறுவிதமாக நினைத்தார்கள்; நினைவைச் செயல்படுத்தினார்கள்; சிறிய சிக்கல் ஏற்பட்டு, பெரிய சிக்கலாயிற்று; ஒன்று போனால் மற்றொன்று. லேபர் என்றால் அலர்ஜி என்ற நிலைமைக்கு வந்துவிட்டார். தொழிலை மூட மனமில்லை. வேறு வழியில்லாமல் நித்திய அவஸ்தையுடன் நிம்மதி இழந்த நிலையில், அவர் எடுக்காத முடிவைத் தொழிலாளர்கள் எடுத்து, எல்லாத் தொழில்களையும் மூடி-விட்டார்கள். இனி கவலைக்கே இடமில்லை. தொழில் இருந்தால்தானே கவலையை உற்பத்தி செய்யும்! நம் கையில் உள்ள பிடியைப் பெரிய மனது செய்து விட்டுக்கொடுப்பது அன்னை முறைகளில் ஒன்று என்று அறிந்து, அந்தத் தொழில் அதிபர் ஸ்டிரைக் நேரத்தில் வந்த ஒரு சந்தர்ப்பத்தில் தைரியமாக அம்முறையைக் கையாண்டார். ஸ்டிரைக் முடிந்தது. ஒரு மாதம் கழித்து அவர் எழுதினார். ‘இதுவரை லேபர் என்றால் எனக்குத்



தலைவலி; இன்று லேபர் பிரச்சனையில்லை. இனி லேபர் பிரச்சனையாக வழியும் இல்லை. கவலை ஒழிந்து, பூரண நிம்மதி ஏற்பட்டுவிட்டது’’ என்று அவர் எழுதினார்.

என் தொழில் வருமானம், மழையை பொறுத்தது; மழை பெய்தால் உண்டு, பெய்யாவிட்டால் ஒன்றுமில்லை. அதனால் எனக்கு நிம்மதி என்பது எப்பொழுதுமே இருந்ததில்லை என்று ஒருவர் சொன்னால் அது முழு உண்மை. அவர் மழைக்குக் கட்டுப்பட்டவர். மழை அவர் கையில் இல்லை. அதனால் அவருக்கு நிம்மதி ஏற்பட வழியில்லை. இது ஒருவருடைய தொழில் நிலை. இவருக்கு நிம்மதி ஏற்பட முடியுமா? அன்னை நிம்மதி அளிப்பாரா? அப்படிப்பட்ட வழி ஒன்று இருந்தால் தெரிந்துகொள்ள எல்லோரும் விரும்புவார்கள் இல்லையா?

அவர் சொல்வது உண்மை. வாழ்க்கையில் அந்த உண்மை நின்று நிலைபெறுகிறது. அன்னையின் வாழ்வில், அதாவது அன்னை பக்தர்களுக்கு அளிக்கும் வாழ்வு அந்த உண்மைக்குக் கட்டுப்படாது. அன்னை வாழ்வில் நிம்மதி நிலையானது. மழைக்குத் தொழில் கட்டுப்படலாம். அன்னை வாழ்வு மழையாலோ, மற்றதாலோ நிர்ணயிக்கப்படக்கூடியதில்லை. அன்னை வாழ்வு தன்னையே நிர்ணயித்துக்கொள்ளும் திறனுள்ளது. மழையால் நிர்ணயிக்கப்படக் கூடிய வருமானம், அன்னை வாழ்வில் நம் நம்பிக்கையால் நிர்ணயிக்கப்படும். இந்த உண்மையை அந்த அன்பர் ஏற்றுக்கொள்ளும் வகையில் மற்ற பல அன்பர்களுடைய வாழ்வில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் மூலம் விளக்கினால், அந்த அன்பர் அதை ஏற்றுக்கொண்டால், அவருக்கு நம்பிக்கை பிறக்கும். 45 வருஷமாக இல்லாத நிம்மதி அந்த நம்பிக்கை மூலம் ஏற்படும். தொழிலில் மழை என்பது முக்கியம். என்றாலும் மற்ற விஷயங்களாக விலை கிராக்கி, சர்க்கார் மான்யம் போன்ற வேறு பல அம்சங்கள் இருப்பதால், அன்னை ஓர் அம்சம் பொய்த்த காலத்து, மற்றோர் அம்சத்தின் மூலம் அதே வருமானத்தைக் கொடுப்பார். அன்பருக்குத் தேவையானது நம்பிக்கை. மழை மீதுள்ள நம்பிக்கையைத் தடம்புரட்டி அன்னை மீது வைக்க வேண்டும். அன்னை பல

வகைகளில் செயல்பட முடியும். பலனை அன்னை நிர்ணயிப்பதால், அன்னை மீது நம்பிக்கையுள்ளவரை பலனுண்டு; நிம்மதிக்குப் பங்கம் வாராது.

‘‘எனக்கும் வயதாகிறது. என்னைப் பார்த்தபின் எந்த வரனும் திருமணத்திற்குச் சம்மதித்ததில்லை’’ என்று நம்பிக்கையை இழந்தவருக்கு நம்பிக்கையை இடம் மாற்றி வைத்தால் நல்லது என்ற எண்ணம் இதமாகப்பட்டது. தன் அழகை நம்புவதைவிட, அன்னையை நம்புதல் நல்லது என்ற எண்ணத்தை அவர் ஏற்றுக்கொண்டார். நம்பிக்கையும், நிம்மதியும் பிறந்தன; கவலை அழிந்தது. அடுத்த வரன் சம்மதித்தார். அவர் மிராசுதாரர். திருமணம் நடந்தேறியது.

‘‘என் வேலை நிலையில்லை. ஏனெனில் என்னுடைய டிபார்ட்மெண்டே தற்காலிகமானது. நான் எப்படி நிம்மதியுட-னிருக்க முடியும்?’’ என்றவர் டிபார்ட்மெண்ட், சட்டம், இவற்றிலிருந்து நம்பிக்கையை அன்னையிடம் மாற்றியவுடன், டிபார்ட்மெண்டைக் கலைத்து விட்டார்கள். அவருடைய ஆரம்ப பயம் பலித்துவிட்டது. செய்வதறியாது திகைத்திருந்த நேரத்தில், நம்பிக்கையை இழக்காத காரணத்தால், டிபார்ட்மெண்டிலிருந்து எதிர்பாராதவிதமாகக் கடிதம் வந்தது. மாநில சர்க்கார் இந்த மத்திய சர்க்கார் டிபார்ட்மெண்ட் கலைக்கப்படுவதால், இதிலுள்ள எல்லா ஆபீசர்களையும் அதே சம்பளத்தில் தன் இலாக்கா ஒன்றில் எடுத்துக்கொள்ள சம்மதித்து இருப்பதாகவும், அதனால் புது போஸ்டிங் வரும் என்று கடிதம் கூறியது. அன்னையை முழுவதும் நம்பிய அன்பருக்கு இது ஆச்சரியத்தைக் கொடுக்கும் நேரத்தில், அவரை கெஜட் பதவிக்குத் தேர்ந்தெடுத்து விட்டதாக மற்றொரு தகவல் கிடைத்து, நிலைமை மாறி உயர்ந்தது.

(தொடரும்)



## நெஞ்சுக்குரிய நினைவுகள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

### Synthesis of Yoga
### Part IV Chapter 1, Principle of Integral Yoga (P. 586)

1. சிரமம் என்று காண்பது சிறப்பை அறிவது.
2. *வேலை உள்ளேயிருக்கிறது - உள்ளே மட்டும் உள்ளது.*
3. முக்கியத்தை மூலம் உணர்ந்தால், முடியாதது முடியும்.
4. பெரிய வேலையைச் சிறியதாக்க, கருவி பெரியதாக இருக்க வேண்டும்.
5. சமர்ப்பணம் தவிர வேலையில்லை.
6. *யோகத்தைக் கருத்து ஏற்று, ஆத்மாவுக்குச் சமர்ப்பணம் செய்தால் யோகம் சூட்சுமத்தில் பூர்த்தியாகும்.*
7. யோகம் ஜீவனானால் க்ஷணம் யுகமாகும்.
8. நேரடியாக ஆத்மாவை அடைவது நெறி.
9. நிதர்சனம் ஆத்ம தரிசனம்.
10. அன்னை தரிசனம் நிதர்சனம் நித்ய தரிசனமாவது.
11. *உள்ளே கரைந்தவன் உலகைக் காண்பது திரிகால திருஷ்டி.*
12. சத்திய ஜீவனின் விழிப்பு சமாதி.
13. காலம் மனத்திற்குரியது.
14. ஆத்மாவுக்குரியது காலத்தைக் கடந்தது.
15. யோகியில் காலமும், கடந்ததும் சத்திய ஜீவியமாகின்றன.
16. தன்னை மறந்த பிரம்மம் அன்னையில் வளர்வது சிருஷ்டி.

17. கணவன், மனைவி, தலைவர் உருவில் அன்னையை ஏற்று கடமையைச் செய்வது வாழ்வில் யோகம்.

18. இடைவிடாது இதயத்தை அன்னை ஆட்கொண்டதைக் காட்டுவதே மணிக்கொருமுறை செய்யும் சமர்ப்பணம்.

19. இலட்சியத்தால் இதயம் மலர்வது பொங்கி எழும் பூரிப்பு.

20. அன்னை பகவானைச் சந்தித்த பொழுது கிருஷ்ண பரமாத்மா நிலையிலிருந்தார்.

21. ஆத்மா ஆழத்தில் கனிந்து மலர்ந்தால் அன்னை நம்மை நாடி வருவார்.

பொங்கி வரும் சந்தோஷம் ஆத்ம விழிப்புக்கு அறிகுறி. அது நல்ல திருப்பம்.

முதற்படியாக ஒரு முடிவு - தீர்மானம் - எடுப்பது நல்லது.

யோகம் என்பது பெரிய விஷயம். அதைச் செய்ய எடுக்கும் முடிவு தீர்க்கமான முடிவாக இருப்பது நல்லது. *முடிவு எடுக்க நாளாகலாம். ஆனால் முடிவு என எடுத்தபின், முன் வைத்த காலைப் பின் வைக்கக் கூடாது.* அது போல் முடிவு அன்னை நம்முள் எடுக்கும் முடிவாக இருக்க நாம் செய்யக் கூடியவை என்ன?

1. குடும்பத்திலுள்ள சிறு பிரச்சனைகளைச் சமர்ப்பணத்தால் ஒன்று விடாமல் தீர்ப்பது.

2. வீடு சுத்தமாக இருப்பது.
(வீட்டைச் சுத்தம் செய்ய நேரம், முயற்சி, செலவாகும். உங்களுக்குத் தெரிந்த வீடுகளில், இடங்களில் அதிகபட்ச சுத்தம் உள்ள இடம் போல் நம் வீட்டைச் சுத்தம் செய்ய முடிவு செய்து, அதற்குரிய தேவைகளைச் சேகரித்தால் அவை தானே சேகரமாவது நம் முயற்சிக்கு சாங்ஷன் - அன்னை அனுமதி - இருப்பதாக அர்த்தம். *இங்கும், எங்கும், நிதானமாக பொறுமையாக ஆரம்பிக்கலாம். ஆரம்பித்ததை தவறாமல் தொடர வேண்டும்.*)



3. பேச்சு சத்தம் குறைந்து, அளவும் குறைய வேண்டும். அளவு ½ பாகம் ¼ பாகம் என 1/8 பாகமாகி தேவைப்பட்டதை சில சொற்களால் *முடிந்தால் ஒரு சொல்லால் சொல்லப் பழக வேண்டும்.*

4. சண்டை, சச்சரவு வாழ்வில் இருக்கக் கூடாது. அப்படியிருந்தால் வீடு, தொழிலில் அது அறவே விலக்கப்பட வேண்டும்.

5. முதற்கட்டத்தில் எரிச்சலை வெளியிடக் கூடாது. முடிவான கட்டத்தில் உள்ளே எரிச்சல் எழக் கூடாது.

6. இதுவரை கூறியவற்றை அடிக்கடி - மாதம் ஒருமுறை, வாரம் ஒருமுறை - மீண்டும் படிப்பது.

7. சமர்ப்பணத்தை முக்கியமாக மேற்கொள்ள மனமும், செயலும் தயாராகி, இனிச் சமர்ப்பணத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்ற நிலை எழ வேண்டும்.

8. கடனிருந்தால் திருப்பிக் கொடுக்க முயல வேண்டும். வர வேண்டிய பணம் காலதாமதமானால், *கேட்காமல்* மௌனமாக வசூல் செய்ய வேண்டும்.

9. வாழ்வில் புதிய வாய்ப்புகள், நம் தொழிலில் இல்லாத வாய்ப்புகள் எவருக்கும் வராத வாய்ப்புகள் வந்தால் நாம் யோகம் செய்ய முடிவு எடுக்கப் போவதை வாழ்வு ஏற்றுக் கொண்டதாக அர்த்தம்.

10. அன்னை அதுபோல் நம் முடிவை ஏற்றுக் கொண்டால் ஆழ்ந்த நிலையில் அமைதியும் சந்தோஷமும் எழும்.

பொறுமையாக, நிதானமாக, அவசரத்தின் சுவடேயில்லாமல் யோகத்தை ஆரம்பிக்க எடுக்கும் முடிவை அன்னை நிறைவேற்றுவார்.

## அன்பர் அனுபவம்

‘பக்தியும், ஆர்வமும், நம்பிக்கையும் உள்ள எவரும் ஸ்ரீ அன்னையின் அருளையும், பகவான் ஸ்ரீ அரவிந்தரின் அழுத்தமான அமைதியையும் எங்கும், எப்போதும் தடையின்றிப் பெறலாம்’ என்பது அன்னை நமக்களித்த வரம். அது நாம் கேட்காமல் பெற்ற வரம். நம்மால் கேட்கத் தெரியாத வரம்.

வேலை நிமித்தம் குடும்பத்துடன் தில்லியில் வசிக்கும் அன்பர்கள், குறிப்பிட்ட தினங்களில் ஒன்றாகக் கூடி தியானம் செய்வது வழக்கம். அவர்களில் கல்யாணி மாமியும் ஒருவர். பவித்திரமான பக்தியும், பொறுமையும் நம்பிக்கையும் கொண்டவர்.

தியானக் கூடல் நடத்திவந்த அன்பரின் கணவருக்குப் பணியிட மாற்றம் வரவே, தியானக் கூடல் தொடர்ந்து நடைபெற வேண்டும் என விரும்பினர் மற்ற அன்பர்கள். எங்குக் கூடலாம் எனக் கேள்வி வந்தபொழுது கல்யாணி மாமி தானே முன்வந்து தம் இல்லத்தில் தியானக் கூடலைத் தொடரலாம் என மனமுவந்து கூறினார். மாற்றல் வந்த அன்பருக்கும் கூடல் தொடருவதில் சந்தோஷம்.

தற்செயலாக அன்னையைத் தரிசித்தவர்களோ அல்லது அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டவர்களோ, யாராக இருப்பினும், அன்னையைப் பக்தி நம்பிக்கையுடன் வாழ்வில் ஏற்றவர் அனைவரும் அவருடைய அருளைப் பெறுகின்றனர்; அவர்களுடைய துயர்கள் தாமாகவே தீர்கின்றன என்பவை அன்பர்களது அனுபவங்கள். அப்படி இந்த மாமி வாழ்விலும் நிகழ்ந்த அன்னையின் அனுக்கிரகங்கள் பல.

இவரது பெண்கள் அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. தம் மூன்று பெண்களில் மூத்த பெண் தவிர மற்ற இருவருக்கும் குழந்தைச் செல்வங்கள் உண்டு. இவரது முக்கியப் பிரார்த்தனை நாற்பதைத் தாண்டிய தம் மூத்த பெண்ணிற்குக் குழந்தைச் செல்வம் வேண்டும் என்பது. பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் வேண்டி வந்தார்.



ஆச்சரியமாக, வயதைத் தாண்டிய காரணத்தை விலக்கி, ஆனந்த அருட்கொடையாக ஸ்ரீ அன்னை அருளிய குழந்தைச் செல்வம், *தியானக் கூடலை அவரது இல்லத்தில் தொடர்ந்த அதே மாதம் அவரது பெண் வயிற்றில் உதித்தது*. அன்பரின் அழைப்பிற்கு அன்னை சூட்சுமமாக வந்து, தம் ஆன்மிகச் சக்தியால் அன்பரின் பிரச்சனைகளுக்கு விடிவை நிச்சயம் ஏற்படுத்துவார் என்பது இவரது வாழ்வில் நிதர்சனமாகியது. கவலை மறைந்து குடும்பம் சந்தோஷத்தால் பூரித்தது.

பிரசவத்திற்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவரை பரிசோதனை செய்த டாக்டர் இவருக்கு சிசேரியன் செய்துதான் குழந்தையை எடுக்க வேண்டும், வேறு வழியில்லை என்று கூறி விட்டார். மாமி தன் பிரார்த்தனையைத் தொடங்கினார். இவர் அன்னையை இங்கு தீவிரமாக அழைக்க, தியேட்டரில் ஆப்பரேஷனுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நடந்து முடிந்தன. ஆப்பரேஷன் நடக்கவிருக்கும் சில நிமிடங்களுக்கு முன்னதாக, அதிசயிக்கத்தக்க வகையில், டாக்டர்களும் நம்ப முடியாத அளவில், நார்மல் பிரசவம் நடந்தது. நல்ல செய்தியைக் குடும்பத்திற்குக் கூற வந்த டாக்டர்க்கு குடும்பத்தார் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தனர். ‘நன்றி கூற வேண்டியது எனக்கல்ல, பெண்ணின் அம்மாவுக்கு’ என்ற டாக்டர், ‘இது பிரார்த்தனையால் மட்டுமே நடந்த பிரசவம், நார்மலாக நடக்க எந்த அறிகுறியும் இல்லாத போது திடீரென்று ஆப்பரேஷன் தேவைப்படாத சூழல் எழுந்ததும், நல்ல படியாக நார்மல் டெலிவரி நடந்ததும் மருத்துவர்களான எங்களுக்கே ஒரு அதிசயம், இந்த அம்மாவின் பிரார்த்தனையே இதை நடத்தியது’ எனக் கூறிச் சென்றார்.

மேலும் பல அனுபவங்கள், டாக்டர்கள் சொல்வதை அன்னையிடம் சமர்ப்பித்து, அன்னையை மட்டுமே நம்பிச் செய்த பிரார்த்தனையின் விளைவை மற்றுமொரு விஷயத்தில் கண்ணுற்றது மற்றும் நாமறியாமல் அன்னை நமக்குச் செய்பவையாக ஸ்ரீ அன்னையின் கவசப் போர்வை முதலான அனுபவங்களை அவரது மொழியிலேயே அறிய நாமும் ஆவலுடன் காத்திருப்போம்.

## மீன்கொடி

(சென்ற இதழின் தொடர்ச்சி)

சமர்ப்பணன்

### 19. சிவசங்கரன்

தாத்தா வந்ததிலிருந்து அவரும், ஜமுனாவும் இடைவிடாது பேசிக் கொண்டே இருந்தனர். எனக்கு ஜமுனாவோடு பேச நேரமே கிடைக்கவில்லை. அந்த நேரத்தை சிவசங்கரனின் மென்பொருளைச் சீர் செய்வதில் செலவிட்டேன்.

'என் அப்பாவால் நம் கம்பெனிக்குப் பெரிய நஷ்டம் வந்தது என்று பாட்டி கோபித்துக் கொண்டாராமே. அதன்பின் சமாதான-மானாரா?' என்று கேட்டாள் ஜமுனா.

'யார் மேல்தான் அவள் கோபித்துக் கொள்ளவில்லை? உண்மை என்னவென்றால் உன் அப்பா செய்த காரியத்தால் கம்பெனியின் விற்பனை முப்பது சதவிகிதம் குறைந்து பின் முன்னூறு சதவிகிதம் அதிகமாயிற்று' என்றார் தாத்தா.

'அது எப்படி?' என்று கேட்டாள் ஜமுனா.

'பாண்டிச்சேரி வியாபாரி சாராயக் கடைகளுக்கு நம் பாட்டில்கள் போவதை மறைத்துப் பொய் சொல்லி விட்டான். அவன் சாராயக் கடைகளுக்குத் தந்ததைவிட நம்பிய என்னிடம் பொய் சொன்னதுதான் எனக்கு அதிக வருத்தத்தைத் தந்தது. நான் அவனுக்கு பாட்டில்கள் தர மாட்டேன் என்று சொன்ன ஒரு மாதம் கழித்து பாண்டிச்சேரிக்கு வந்த ஒரு பிரெஞ்சுக்காரன் கிளப்பிற்குப் போய் சாராயம் குடித்திருக்கிறான். அப்போது நம் பாட்டில், கண்ணாடி தம்ளர் தரத்தைப் பார்த்து அசந்து போய் விசாரித்து விட்டு, அடுத்த நாளே என்னைப் பார்க்க சென்னை வந்து விட்டான். அவன் பிரான்சில் பெரிய கம்பெனி வைத்திருக்-கிறான். 'என் யந்திரங்களுக்கு கண்ணாடி பாகங்கள் செய்து கொடு' என்றான். சில நாட்கள் கழித்து இந்தியாவில் 'எங்கள் யந்திரங்களை விற்றுக் கொடு' என்றான். சட்டென்று விற்பனை



மூன்று மடங்காகி விட்டது. இதெல்லாம் நடப்பதற்குள் பாட்டி உன் அப்பாவைக் கோபித்துக் கொண்டாள். ஒரு வார்த்தை பொறுக்காத உன் ரோஷக்கார அப்பன் மதுரைக்குப் போயே போய்விட்டான். அப்போது அவன் சின்ன பையன். பதினெட்டு, இருபது வயதிருக்கும். சரியாக நினைவில்லை' என்றார் தாத்தா.

'நீங்கள் பாட்டியைச் சமாதானப்படுத்தவில்லையா?' என்று கேட்டாள் ஜமுனா.

'நான் யாரையும் சமாதானப்படுத்துவதில்லை. சின்ன வயதில் உன் பாட்டியை ஓரிரண்டு முறை சமாதானம் செய்திருக்கிறேன். அவ்வளவுதான். யாராவது என்னை விட்டுப் போனால் நான் திரும்பக் கூப்பிடுவதில்லை. ஒரு தடவை ஓடியவன் அதையே திரும்பவும் செய்வான். ஆனால், உன் அப்பாவிற்கு வீடு வாங்க பணம் தந்தேன். வேண்டாம் என்று சொல்லி விட்டான். அதன்பின்னும் கஷ்டப்படுகிறானே என்று நான்கைந்து முறை பணம் தந்தேன். வாங்கிக் கொள்ளவில்லை. ஏதோ என் பிரியத்திற்காக பண்டிகை நாட்களில் ஜவுளி வாங்கித் தருகிறேன் என்றேன். பெரிய மனது பண்ணி அதை மட்டும் வருஷாவருஷம் வாங்கிக் கொள்கிறான். என் கம்பெனியில் ஒழுங்காக வேலை பார்த்த எல்லோருக்குமே எந்த ஊரில் இருந்தாலும் ஜவுளி வாங்கித் தருவேன். அது பாட்டிக்குத் தெரியாது. தெரிந்தால் எதிர்ப்புக் காட்ட பட்டினி கிடப்பாள். ஒருவருக்கும் ஒரு வாய் சாப்பாடு போடக்கூட மனசு வராத அற்பப் பிறவி' என்றார் தாத்தா.

'கம்பெனி வேலையை விட்டதும் அப்பாவிற்குப் பாண்டி வியாபாரி கடிதம் எழுதினாராம். 'என்னால்தான் உங்கள் வேலை போய்விட்டது. பரிகாரம் செய்ய விரும்புகிறேன். எங்கள் கடையில் வேலைக்கு வாருங்கள்' என்று எழுதியிருந்தாராம். அப்பா பதிலே போடவில்லை' என்றாள் ஜமுனா.

தாத்தா பெருமூச்சு விட்டார். 'இத்தனை வருஷம் உழைத்ததில் சொத்து சேர்ந்திருக்கிறது. வருமானத்தைதான் காணோம். யாருக்கும் எதுவும் செய்ய முடியவில்லையே என்று வருத்தமாக இருக்கிறது. வருமானமில்லாத சொத்து, பிச்சைக்காரனுக்குக்

கிடைத்த யானை போல. சொத்தைக் காப்பாற்ற நாம் பட்டினி கிடக்க வேண்டியிருக்கிறது. ‘சுயதொழில் செய்’ என்று ஊருக்கெல்லாம் புத்திமதி சொன்னேன். என் பிள்ளைகள் வேலையே பார்த்ததில்லை. பேரர்கள் சம்பளத்திற்கு வேலைக்குப் போகிறார்கள். பரமனாவது சொந்தமாக ஏதாவது செய்யட்டும்’ என்றார்.

இப்படி ஏராளமான பழைய, புதிய கதைகளைத் தாத்தா ஜமுனாவிற்கு சொல்லிக் கொண்டேயிருந்தார். இவளும் ஏதோ துப்பறியும் கதை கேட்பது போல மெய்ம்மறந்து கேட்டுக் கொண்டிருந்தாள். இதைச் சொன்னபோது ‘வாழ்க்கையில் மறைந்திருக்கும் மர்மத்தைத் துப்பறிந்து கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறேன்’ என்று கூறினாள்.

தாத்தா வந்த அடுத்த நாள் என் மென்பொருள் வேலை முடிந்ததால், சிவசங்கரனைப் பார்க்கக் கிளம்பினேன். ஜமுனா இருநூறு ரூபாய் கொடுத்தாள். ‘மூன்றாயிரத்திற்கு ஷேர் வாங்க மறந்து விடாதீர்கள்’ என்றாள்.

‘எவரிடமும், எதையும் கேட்கக் கூச்சமாக இருக்கிறது’ என்றேன்.

‘ஜமுனா கேட்கிறாள் என்று சொல்லுங்களேன்’ என்று கூறி வழி அனுப்பி வைத்தாள் ஜமுனா.

சிவசங்கரன் மென்பொருளை இயக்கிப் பார்த்தான் ‘எல்லாம் சரியாகி விட்டது’ என்று கூறிவிட்டு காசோலைப் புத்தகத்தை எடுத்தான்.

‘எனக்குப் பணமாக வேண்டாம், பங்குகளாக வேண்டும்’ என்றேன்.

‘எப்போதிலிருந்து ஷேர்கள் வாங்குகிறாய்? யார் மூலம் வாங்குகிறாய்?’ என்று கேட்டான் சிவசங்கரன்.

‘இதுவரை வாங்கியதில்லை. இனிமேல்தான் உன் மூலம் வாங்க வேண்டும்’ என்றேன்.

‘என்ன திடீரென்று பங்கு சந்தையில் ஆர்வம் வந்து விட்டது? உன் அண்ணார்கள் சொன்னார்களா?’ என்றான் சிவசங்கரன்.



‘ஜமுனா வாங்கச் சொன்னாள். அண்ணார்கள் ஷேர்கள் வாங்குவார்கள் என்பதே எனக்குத் தெரியாது’ என்றேன்.

‘போன வருஷம் வரை ஏகப்பட்ட ஷேர்கள் வாங்கினார்கள். பெரிய நஷ்டம் வந்து கடனாளி ஆகி, சமீபத்தில்தான் எப்படியோ அந்தக் கடனைக் கட்டி முடித்தார்கள். வேறு என்னவெல்லாம் கடன் இருக்கிறதோ! இப்போது ஷேர்களோ, கடனோ வாங்குவதில்லை. இதெல்லாம் உனக்குத் தெரியாதா?’ என்றான் சிவசங்கரன்.

‘எனக்குத் தெரியாது. ஆர்வத்துடன் தெரிந்து கொள்ள இதென்ன நாவலா, சிறுகதையா?’ என்றேன்.

‘என்ன ஷேர் வேண்டும்?’ என்று கேட்டான் சிவசங்கரன்.

‘அதெல்லாம் எனக்குத் தெரியாது. உன்னையே வாங்கிக் கொடுக்கும்படி ஜமுனா சொன்னாள்’ என்றேன்.

‘மூன்றாயிரத்திற்கு என்ன வாங்குவது!’ என்ற சிவசங்கரன் சிறிது யோசித்து விட்டு ‘ஆதிசிஸ் சாப்ட்வேர் கம்பெனியின் ஷேர்களை வாங்கு. பெரிய சாப்ட்வேர் கம்பெனி பங்கு விலைகள் மிக அதிகமாக இருக்கின்றன. இன்போசிஸிலிருந்து வெளியே வந்த ஆறுபேர் ஆதிசிஸ் என்ற ஒன்றை சொந்தமாக ஆரம்பித்திருக்கிறார்கள். எவருமே வாங்காத ஷேர்கள். நீ வாங்கு’ என்றான்.

‘இன்போசிஸ் அவர்கள் மீது வழக்கு போடப் போவதாக செய்தி வந்ததே’ என்றார் ஒரு உதவியாளர்.

‘அது வதந்தி. ஆனால் அதன் பின்னால் ஏதோ ஒரு ரூபத்தில் உண்மை இருக்கும். வதந்தியை நம்பக் கூடாது. வதந்திக்குப் பின்னாலிருக்கும் உண்மையை நம்ப வேண்டும். இன்று ஆதிசிஸ் ஒன்றுமில்லாத கம்பெனி. எவருமே பொருட்படுத்தாத ஒன்றைப் பற்றி எல்லோரும் பொருட்படுத்திப் பேசுகிறார்கள் என்றால் அதைப் பற்றி ஏதோ நல்ல விஷயம் இருக்கிறது என்றுதான் அர்த்தம். இன்போசிஸ் போன்ற பெரிய கம்பெனி ஆதிசிஸ் மீது வழக்கு போடப் போகிறார்கள் என்றால், பெரிய கம்பெனியின் நிர்வாகம் சிறிய கம்பெனியை ஆரம்பித்தவர்களின் திறமையைப் பார்த்து பதறுகிறது என்றுதானே அர்த்தம்?

உண்மையிலேயே இன்போசிஸ் வழக்குப் போட்டார்கள் என்றால் இன்று எவருக்கும் தெரியாமலிருக்கும் ஆதிசிஸ் உடனே உலகம் முழுவதும் பிரபலமாகிவிடும். அடுத்த நாளே ஷேர் விலை பல மடங்கு கூடி விடும். ஒருவேளை வழக்கு போடாவிட்டாலும், கம்பெனி மெல்ல வளரும்போது ஷேர் விலை மெல்ல மெல்ல உயரும்' என்றான் சிவசங்கரன்.

'அதையே வாங்கு' என்றேன்.

எனக்காக முறைப்படி கணக்கு உருவாக்கி பங்குகளை என் பெயரில் வாங்க ஒரு மணி நேரமாயிற்று. சிவசங்கரன் கொடுத்த பல பக்கங்கள் கொண்ட படிவத்தில் அவன் சுட்டிக்காட்டிய இடங்களில் எல்லாம் கையெழுத்து போட்டேன். என்ன படிவம் என்று தெரியவில்லை

வெளியே வந்தபோது சாலையோரமாக இளநீர் குடித்துக் கொண்டிருந்த சிவசங்கரனின் உதவியாளர் 'சிவா உங்களை நன்றாக ஏமாற்றி விட்டார்' என்றார்.

'புரியவில்லை' என்றேன்

'என் மனைவியின் தங்கை சாப்ட்வேர் எழுதுபவள். இருபதாயிரம் ரூபாய்க்கு அவள் செய்திருக்க வேண்டிய வேலையை நீங்கள் ஐந்தாயிரத்திற்குச் செய்திருக்கிறீர்கள். என் மனைவி கேட்கப் போகும் கேள்விகளுக்கு நான் என்ன பதில் சொல்வது! ஏன் இவ்வளவு குறைவாக பணம் கேட்டீர்கள்?' என்றார் உதவியாளர்.

'நான் எதுவும் கேட்கவில்லையே. கொடுத்ததை வாங்கிக் கொண்டேன்' என்றேன்.

'வாழ்ந்தாற்போலத்தான். தானும் வாழாமல், அடுத்தவரையும் வாழ விடாமல். என்ன பிறவியோ!' என்று எனக்குக் கேட்கும்படி முணுமுணுத்தார் உதவியாளர்.

கடைக்காரர் கேட்ட பணத்தைக் கொடுத்து இரண்டு இளநீர் காய்களை வாங்கிக் கொண்டேன்.

'பரமன், சிவா உங்கள் நண்பர் என்பதால் குறைவான தொகைக்குச் செய்கிறீர்களா?' என்று கேட்டார் உதவியாளர்.



'அப்படியில்லை. என் வேலைக்கு எவ்வளவு வாங்குவது என்று தெரியவில்லை. அதனால் வேலை கொடுப்பவர்கள் கொடுப்பதை வாங்கிக் கொள்வேன்' என்றேன்.

'என் மைத்துனிக்காக தெரிந்தவர்கள் மூலம் நான் பல வேலைகளை எடுக்க முடியும். கைவசமே மூன்று வேலைகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் அவளால் செய்ய முடியுமா என்று தெரியவில்லை. மாதம் முழுவதும் சின்னச் சின்ன வேலைகளாக என்னால் தர முடியும். செய்கிறீர்களா?' என்றார் உதவியாளர்.

'நான் செய்கிறேன். இப்போது கூட வேலையில்லாமல்தான் இருக்கிறேன்' என்றேன்.

'இருங்கள். நான் சிவாவிடம் சொல்லிவிட்டு வருகிறேன்' என்றார் உதவியாளர்.

சிவாவின் உதவியாளரோடு அவர் வீட்டிற்குச் சென்றேன். அவரும், அவர் மைத்துனியும் நன்றாகப் பேசினார்கள்.

'எனக்கு பெரும்பாலான வெளிநாட்டு வேலைகள் இன்டர்நெட் மூலம் கிடைக்கின்றன. நீங்கள் கூட முயற்சி செய்யலாம்' என்றார் உதவியாளரின் மைத்துனி.

'நீ பேசாமலிரு' என்று தன் மைத்துனியிடம் கூறிய உதவியாளர் என்னிடம் 'அது அவ்வளவு சுலபமில்லை. நேரம் வீணாகும்' என்றார்.

உதவியாளர் ஏதோ போன் பேச அப்பால் சென்ற போது 'நீங்கள் இன்டர்நெட்டில் முயற்சி செய்யுங்கள்' என்றார் அவர் மைத்துனி.

'எப்படி இன்டர்நெட்டில் வேலை வாங்குவது என்பது எனக்குத் தெரியாதே' என்றேன்.

அதை எனக்குச் சொல்லித் தந்தாள் அந்தப் பெண்.

தன் மைத்துனியிடம் பேசிவிட்டு, உதவியாளர் எனக்கு இரண்டு வேலைகள் தந்தார். ஐந்தாயிரம் முன்பணம் தந்தார். 'ஒரு வாரத்தில் முடித்துத் தருகிறேன்' என்று கூறி விடைபெற்றேன்.

அங்கிருந்து நேராக மயிலாப்பூர் சென்றேன். இசைக்கருவிகள் விற்கும் கடை ஒன்றினுள் நுழைந்தேன். எனக்கு வீணை பற்றி ஓரளவிற்குத் தெரியும். இரண்டாயிரம் ரூபாயிலிருந்து, ஒரு லட்சம் ரூபாய் வரைக்கும் பலதரப்பட்ட வீணைகள் இருந்தன. ஒரு லட்சம் விலையுள்ள சரஸ்வதி வீணை பிடித்திருந்தது. இதற்கெல்லாம் பேங்கில் கடன் தருவார்களா என்று தினகரனைத்தான் கேட்க வேண்டும். வீணைக்காக கடன் வாங்க ஜமுனா ஒப்புக் கொள்வாளா என்று தெரியவில்லை. எல்லா வீணைகளையும் பார்த்துவிட்டு இறுதியில் நான்காயிரம் ரூபாய்க்கு வீணை ஒன்றை வாங்கிக் கொண்டேன். மூன்று முழம் மல்லிகைப் பூ வாங்கிக் கொண்டேன். பூக்காரி இரண்டரை முழம்தான் அளந்தாள் என்பது தெரிந்தும் அதை மனநிறைவோடு வாங்கிக் கொண்டேன்.

வீடு திரும்பியதும் பூவையும், வீணையையும் அவளிடம் தந்தேன். ‘ஏது பணம்?’ என்று ஜமுனா கேட்பாள் என்று நினைத்தேன். கேட்கவில்லை. ‘எவ்வளவு ஆயிற்று?’ என்று கேட்பாள் என்று நினைத்தேன். கேட்கவில்லை. வீணையைப் பற்றி ஒரு கேள்வியும் கேட்கவில்லை.

பூவை கூந்தலில் சூடிக் கொண்ட பின், சிறிது நேரம் வீணையை பார்த்துக் கொண்டிருந்தாள். பின் அதை மார்போடு தழுவி முத்தமிட்டாள். என் நெஞ்சம் குளிர்ந்தது.

‘எனக்கு?’ என்று கேட்டேன்.

‘தாத்தா உள்ளறையில் தூங்கிக் கொண்டிருக்கிறார்’ என்று கூறி சிரித்தாள் ஜமுனா. பின் அறைக்குள் எட்டிப் பார்த்துவிட்டு என் சட்டைக் காலரை பிடித்து இழுத்து கன்னத்தில் முத்தமிட்டாள். ‘எதையும் எவரிடமும் கேட்க மாட்டேன் என்று பெருமை அடித்து கொண்டீர்கள். முத்தம் மட்டும் கேட்கலாமா?’ என்றாள் ஜமுனா.

‘உன்னிடம் மட்டும் எதையும் கேட்பேன்’ என்றேன். பின் குற்ற உணர்வோடு ‘மலிவான வீணை’ என்றேன்.

‘இதன் மதிப்பு எனக்குத்தான் தெரியும்’ என்றாள் ஜமுனா.



சிவசங்கரன் தந்த ரசீதை ஜமுனாவிடம் தந்தேன். ‘ஆதிசிஸ் ஷேர்கள் வாங்கியதற்கு என்ன காரணம் சொன்னார்?’ என்று கேட்டாள். நான் சொன்னவற்றை கவனமாக கேட்டுக் கொண்டாள். இன்னொரு முறை கூறச் சொல்லி கேட்டுக் கொண்டாள்.

‘ஆதிசிஸ் சின்ன கம்பெனி, இன்போசிஸ் பெரிய கம்பெனி என்றீர்களே? நாமே இன்போசிஸ் போலவோ, அதை விட பெரிதாகவோ ஒரு கம்பெனி ஆரம்பித்தால் என்ன!’ என்றாள் ஜமுனா.

‘முதலில் இளநீர் சாப்பிடு. மூளைக் கொதிப்பு அடங்கும்’ என்று கூறி இளநீர் காய்களை அவளிடம் தந்தேன்.

‘தென்னந்தோப்பு இருந்தால் நன்றாக இருக்கும். இரண்டு காய்கள்தானா?’ என்று கேட்டாள் ஜமுனா.

‘உனக்கொன்று, தாத்தாவிற்கொன்று’ என்றேன்.

‘உங்களுக்கு?’ என்றாள் ஜமுனா.

‘மறந்து விட்டேன்’ என்றேன்.

தாத்தாவிற்கு ஒரு காயைத் தந்துவிட்டு, இன்னொன்றை நானும், ஜமுனாவும் பகிர்ந்து கொண்டோம்.

சிவசங்கரனின் உதவியாளர் பற்றி சொன்னேன். வீணை வாங்கியது போக மீதியிருந்த பணத்தை அவளிடம் கொடுத்தேன்.

‘நல்ல பெண்ணா?’ என்று கேட்டாள் ஜமுனா.

‘எனக்கே சுமாராகத்தான் சாப்ட்வேர் எழுதத் தெரியும். அவர் திறமையை என்னால் மதிப்பிட முடியாது. பழகினால்தான் குணம் தெரியும்’ என்றேன்.

‘அதைப் பற்றிக் கேட்கவில்லை. அழகியா என்று கேட்டேன்’ என்றாள் ஜமுனா.

‘நான் கம்ப்யூட்டரைத்தானே பார்த்தேன். பெண்ணைப் பார்க்கவில்லையே!’ என்றேன்.

‘அப்படியே எப்போதும் இருங்கள்’ என்றாள் ஜமுனா.

அன்றிரவு தூங்க வெகு நேரமாகிவிட்டது. இன்டர்நெட்டில் என் பெயரை சுயவேலை வாய்ப்பு தரும் பல வலைதளங்களில் பதிவு செய்த பின்தான் ஜமுனா என்னைத் தூங்க அனுமதித்தாள். தாத்தா கூடத்தில் படுத்தார்.

உள்ளறையில் நான் பாயில் சாய்ந்த பின் வீணையின் தந்திகளை மெல்ல வருடிக் கொண்டே இருந்தாள். அந்த மீட்டாத வருடலில் எனக்குள் மென்மையான காதல் கானம் ஒலித்துக் கொண்டே இருந்தது.

## 20. மீசை தாத்தாவின் துறவு

தாத்தா வந்த இரண்டாவது நாள் நானும், ஜமுனாவும் சித்தப்பாவின் வக்கீலைப் போய் பார்த்தோம். வக்கீல் இல்லை. வயதான உதவியாளர்தான் இருந்தார்.

அவருக்கு என்னைத் தெரிந்திருந்தது. ஜமுனாவைத் தெரியவில்லை. என் மனைவி என்றபோது உடனடியாக நம்பவில்லை. 'எங்களுக்குப் பத்திரிக்கை வரவில்லையே. பின் உனக்கு எப்படிக் கல்யாணம் ஆகியிருக்க முடியும்? உண்மை-யிலேயே மனைவிதானா? ஆதாரமில்லையே?' என்று சந்தேகப்பட்டார்.

நாங்கள் சித்தப்பாவை சந்தித்த மறுநாளே சித்தப்பா வக்கீலைச் சந்தித்து வழக்கை முடிக்கச் சொன்னாராம்.

'கிட்டத்தட்ட ஜெயித்து விட்டோம். இப்போது போய் வழக்கை இனி நடத்த வேண்டாம் என்கிறாயே!' என்று வக்கீல் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் சித்தப்பா கேட்கவில்லையாம்.

'வழக்கை முடித்து விட்டு, அது சம்பந்தமான எல்லா காகிதங்களையும் உன் சித்தப்பாவிடம் வக்கீல் தந்தார். அவர் எல்லாவற்றையும் இங்கேயே கிழித்துப் போட்டுவிட்டார்' என்றார் உதவியாளர்.

எனவே எங்களுக்கு எந்த வேலையும் இருக்கவில்லை.



வாடகை ஸ்கூட்டரை மறுநாளே திருப்பிக் கொடுத்து விட்டேன். பெரும்பாலும் தாத்தாவின் சைக்கிளில் வெளியே சென்று வந்தேன். ஜமுனாவோடு போவதென்றால் மட்டும் மீண்டும் அரை நாள் அல்லது ஒரு நாள் கணக்கில் வாடகைக்கு ஸ்கூட்டர் வாங்கிக் கொண்டேன். வாடகை ஸ்கூட்டர் கடை வரை சைக்கிளில் சென்று அதை நிறுத்தி விட்டு, ஸ்கூட்டரை எடுத்து வருவது எனக்குச் சிரமமாக இல்லை. ஜமுனாவோடு செல்லும் எண்ணம் உற்சாகத்தைத்தான் தந்தது.

மீசை தாத்தா மூன்று நாட்கள் எங்களோடு தங்கியிருந்தார். நான்காவது நாள் காலை போக் ரோடு வீட்டிற்குச் சென்றார்.

போகுமுன்பு ஜமுனாவிடம் கையெழுத்திட்ட காசோலைப் புத்தகம் ஒன்றை நீட்டினார். 'பரமன் எவ்வளவு சம்பாதிப்பான் என்று எனக்குத் தெரியும். வசதியாக இரு' என்றார்.

அதை வாங்கிக் கொள்ள மறுத்து விட்டாள் ஜமுனா. 'இவர் எவ்வளவு சம்பாதிக்கிறாரோ அதற்குள் என்னால் வசதியாக வாழ முடியும்' என்றாள் ஜமுனா.

அன்று மாலை தாத்தாவின் நண்பர் வாசுதேவய்யா ஒரு சிறு பெட்டியோடு வந்தார். அவருக்குத் தாத்தாவின் வயதாகிறது. சூளைமேட்டில் எங்கள் வீட்டருகே 'நமது நகலகம்' என்று ஒரு போட்டோ காபி கடை வைத்திருக்கிறார். அவர் பெயர் வாசுதேவன். நான் அவரை வாசுதேவய்யா என்று அழைக்க ஆரம்பித்து அந்த பெயர் அவருக்கு நிலைத்துவிட்டது.

'வெளியே போயிருந்தீர்களா?' என்று கேட்டார்.

'இல்லையே' என்றாள் ஜமுனா.

'கொஞ்ச நேரத்திற்கு முன்பு மீசைக்காரன், கடைக்கு வந்து இந்தப் பெட்டியை உன்னிடம் தரச் சொன்னான்' என்று கூறி கையில் இருந்த சிறு பெட்டியையும், அதன் சாவியையும் ஜமுனாவிடம் தந்தார்.

'வேறென்ன சொன்னார்?' என்று கேட்டாள் ஜமுனா.

'பெரிய பெட்டியோடு ஆட்டோவில் வந்தான். 'வெளியூர் போகிறேன்' என்று மட்டும் சொன்னான். ஏதோ சரக்கு விற்கப் போகிறான் என்று நினைக்கிறேன்' என்றார் வாசுதேவய்யா.

அவருக்கு நன்றியோடு ஒரு காபியும் தந்து அனுப்பிய பிறகு ஜமுனா பெட்டியைத் திறந்தாள்.

பெட்டி நிறைய ஆவணங்களும், பத்திரங்களும், ஒரு கடிதமும் இருந்தன.

கடிதத்தை வாசித்துவிட்டு ஜமுனா என்னிடம் தந்தாள். தாத்தா கூட்டெழுத்தில் கடிதத்தை எழுதியிருந்தார்.

*‘என் பிரியத்திற்குரிய ஜமுனா,*

*நம்மிடம் இருக்கும் எல்லாச் சொத்துக்களின் விவரங்களையும், பத்திரங்களையும் முக்கியமான காகிதங்களையும் உன்னிடம் ஒப்படைக்கிறேன். பேரர்கள் கூட்டுக் குடும்பமாக சொத்துக்களை வைத்திருப்பதோ அல்லது பிரித்துக் கொள்வதோ அவர்கள் விருப்பம். பாகப்பிரிவினை செய்வதென்றால் அது சுமுகமாக நடக்க வேண்டும் என்பது என் வேண்டுகோள். அதற்கு ஆவன செய்யவும். பல வெற்றுக் காகிதங்களில், பத்திரங்களில் தேதி போடாமல் கையெழுத்து போட்டு வைத்திருக்கிறேன். சொத்து, கம்பெனி, குடும்ப விஷயங்கள் அனைத்திலும் எந்த முடிவும் நீ எடுக்க உனக்கு முழு உரிமையைத் தருகிறேன். மற்றவர்கள் உன் முடிவிற்குக் கட்டுப்பட வேண்டும் என்பது என் விருப்பம்.*

*எனக்குரிய முழுமையைத் தேடிச் செல்கிறேன்.*

*அன்புடன்,*

*உன் தாத்தா.’*

‘எத்தனை நாள் பயணம் என்று சொல்லவில்லையே’ என்றேன்.

‘அவருக்கே அது தெரியாது’ என்றாள் ஜமுனா.

‘கடிதத்தைப் பார்த்தால் துறவியாகி விட்டார் என்று தெரிகிறது’ என்றேன்

‘துறவியாகப் போகிறவர் பெட்டியோடா போவார்?’ என்றாள் ஜமுனா.

‘திரும்பி விடுவார் என்றா சொல்கிறாய்?’ என்றேன்

‘அவருக்குரிய முழுமையை தேடிப் போயிருக்கிறார். அது கிடைத்தால் திரும்பி விடுவார்’ என்றாள் ஜமுனா.



‘கிடைக்கவில்லையென்றால்?’ என்று கேட்டேன்.

‘கிடைக்கும்வரை தேடிக் கொண்டு இருப்பார். தேடிக் கொண்டே முன்னேறினால் கடைசியில் தேடுவது கிடைத்து-விடும். தேடுவதை பாதியில் விட்டுவிட மாட்டார்’ என்றாள் ஜமுனா.

‘அடுத்து என்ன செய்வது என்று தெரியவில்லையே?’ என்றேன்

‘உங்கள் அண்ணார்களிடம் சொல்லுங்களேன்’ என்றாள் ஜமுனா.

‘ஆமாம். அதைச் செய்தால்தான் எனக்கு நிம்மதியாக இருக்கும்’ என்றேன்

சிரித்தாள் ஜமுனா. அவள் சிரித்தது அசந்தர்ப்பமானதாக இருந்தது.

தாத்தா வைத்திருந்த பட்டியலையும் பத்திரங்களையும் ஒவ்வொன்றாக சரிபார்க்கத் தொடங்கினாள் ஜமுனா. இருட்டத் தொடங்கும் நேரத்தில் போக் ரோடு வீட்டிற்கு கிளம்பினோம். கடிதத்தை மட்டும் எடுத்துக் கொண்டு வந்தாள் ஜமுனா.

‘பெட்டி?’ என்று கேட்டேன்.

‘இங்கேயே இருக்கட்டும். எல்லாவற்றையும் முழுவதுமாக வாசித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது’ என்றாள் ஜமுனா.

‘இதையெல்லாம் வாசித்தாலும் எனக்குப் புரியாது’ என்றேன்.

‘உங்களை யாராவது வாசிக்கச் சொன்னார்களா?’ என்று கேட்டாள் ஜமுனா.

*(அடுத்து வரும் சில மாதங்களில் மலர்ந்த ஜீவியத்தில் 39 அத்தியாயங்கள் கொண்ட மீன்கொடி தொடர்ந்து வெளியாகும். கால இடைவெளியின்றி உடனே தொடர்ந்து வாசித்து முடிக்க விரும்பும் அன்பர்கள்* **cs@motherservice.net** *என்ற மின்னஞ்சல் முகவரியில் என்னைத் தொடர்பு கொண்டால் முழு நாவலும்* **PDF** *வடிவத்தில் அனுப்பி வைக்கப்படும்)*

(தொடரும்)

★★★

அன்னை இலக்கியம்

## எம்.எஸ் பிறந்தார்

இல. சுந்தரி

*எம்.எஸ் அவர்களின் இசையில் சிறுவயது முதலே ஈடுபாடு கொண்டு நாள்தோறும் அவர்கள் பாடல் பதிவுகளைக் கேட்டு, பக்தியில் உருகி, பாசத்தால் நெகிழ்ந்து ஆனந்தத்தில் மிதப்பதற்கு அம்மாவிற்கு நன்றி சொல்லும் முகமாக 'எம்.எஸ் பிறந்தார்' என்ற கதையினை எழுதும் பேறு பெற்றேன்.*

*அம்மாவிடம் அன்பு கொண்டவர், அவர் பாடலில் இன்புற்றுத் திளைத்தவர் அனைவரும் இக்கதையினைப் படித்து மகிழ அவாவுகிறேன்.*

*இக்கதையெழுத காரணமாய் என் கண்ணில் கண்ணீர் வரச்செய்த அந்தப் பாடல்:*

*சராசரம் உன்னை யாவும் தேடுமே...*
*மறைகளும் மகிழ்ந் துன்னைப் பாடுமே ஏ பிரபோ*
*நிராசையால் நைந்த என் நெஞ்சம்*
*பராவும் உன் பாதார விந்தமே ஏ ஏ*

*உன்னையே எனதுயிர் துணையென்று*
*உவந்ததென் தவறோ ஐயா*
*கனவிலும் உன்னையன்றி நினைவுண்டோ*
*கதி உன் கழலின் நிழலே அன்றோ*
*வானகம் வையகம் தரும் இன்பங்களைக்*
*கருதியதும் உண்டா? இரங்குவதறிந்திலையா?*
*மறந்திடலாகாதையா!*
*இரவெலாம் கண்ணின் நீரருவி பெருகும்*
*அனலில் மெழுகென அகமும் உருகும்*
*ஹரி ஹரி என நாவும் கதறும்*
*இதயமும் பதறும் ஐயா!*

*பாதமலரில் படிந்திடும் வண்டாய்*
*நாதனே உன் இசை பாடினேன் கண்டாய்*
*அடியாள் மீரா அன்றும் இன்றும் உன்*
*அடைக்கலம் ஐயா !*



இனிய அன்னையே,

இசைப் பேரரசி, பக்திப் பழரசம், அன்புச்சுடர், அமரதீபம், நின்னுடைய, குருநாதருடைய அருளாசி பெற்ற அமுதச்செல்வி திருமதி. எம்.எஸ் சுப்புலட்சுமி அவர்களின் இசை மீது எழும் தூய அன்பால் இங்கொரு குயில் கூவ விரும்புகிறது அருள்வாய்.

★★★

அது ஒரு அடுக்குமாடிக் கட்டடம். அங்கு நடுத்தரவர்க்க மக்கள் குடியிருந்தனர். அந்த அடுக்குமாடி குடியிருப்பில் ஒரு புறாக் கூண்டு வீட்டில்தான் நம் கதாநாயகி மீரா தன் தந்தையாருடனும், சிற்றன்னையுடனும் ஒரு அடிமை வாழ்வு வாழ்ந்து வந்தாள்.

அவள் அப்பாவும், சித்தியும் ஏதோ குறைந்த சம்பளத்தில் வேலைக்குப் போய்விடுவர். இவள் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டு வீட்டிற்குள்ளேயே இருக்க வேண்டும் அவர்கள் வீடு திரும்பும் முன்னதாகக் கிடைக்கின்ற சிறிது ஓய்வில் மேலே மொட்டை மாடியில் நின்று சுற்றி உள்ள உலகை ரசித்து சுதந்தரக் காற்றைச் சுவாசிப்பாள். இசை ரசனையே இல்லாத இவள் அப்பாவும், சித்தியும் இவள் மெல்லப் பாடல் வரியை முணுமுணுத்தாலும் கோபப்படுவார்கள். "அங்கே என்ன சத்தம்" என்பார் அப்பா. இராகத்திற்கும், சத்தத்திற்கும் வேறுபாடு தெரியாத இவருடன் எப்படித்தான் அம்மா குடித்தனம் செய்தாளோ. அம்மாவிற்கு மிக இனிமையான குரல் வளம். பாட்டென்றால் உயிர், இசையருமை தெரியாத அப்பா அவளைச் சுதந்தரமாகப் பாட அனுமதித்ததில்லை. அப்பா வீட்டில் இல்லாத நேரத்தில் வாய்விட்டு அம்மா பாடுவாள். எத்தனை நயம் அந்தக் குரலில். எப்படியம்மா நீ இத்தனை நன்றாகப் பாடுகிறாய் என்பாள் இவள். ஓ அதுவா? எனக்கு மிகவும் பிடித்த இசையரசி ஒருவர் இருக்கிறார். அவர் பாட்டைக் கேட்டுக் கேட்டு நான் இப்படிப் பாடப் பழகினேன் என்பாள் அம்மா. யாரம்மா அவங்க? அவங்க பெயர் எம்.எஸ். சுப்புலட்சுமி

என்றாள் அம்மா. இந்தப் பாட்டை அவங்ககிட்ட இருந்துதான் கத்துக்கிட்டீங்களா?

ஆமாம். அவங்க அவங்களோட சின்ன வயசுல பக்த மீராவா நடிச்சிருக்காங்களாம், எங்கப்பா சொல்வார். ஒருதரம் அவங்க பாட்டுக் கச்சேரிக்கு நானும் போயிருந்தேன் அப்ப கூட்டத்தில் எல்லாரும் மீரா பாட்டுப் பாடணம்னு சீட்டெழுதிக் கொடுத்தாங்க. அப்பதான் இந்தப்பாட்டை அவங்க பாடி நான் கேட்டேன். அதிலிருந்து அவங்க கச்சேரி எங்க நடந்தாலும் நானும் அங்க போக எங்க அப்பாகிட்ட கெஞ்சுவேன். தாயில்லாப் பெண் என்று அப்பா என்னை ரொம்ப செல்லமா வளர்த்ததால என் விருப்பம் போல கச்சேரிக்கு அழைச்சிட்டுப் போவாங்க. அப்படிப் போய் போய்தான் இந்தப் பாட்டைக் கத்துக்கிட்டேன் என்பாள். அதனாலதான் எனக்கு மீரான்னு பேர் வெச்சயா? என்பாள் மீரா. ஆமாம், அது மட்டுமில்ல. இந்தப் பாட்டையும் நீ கத்துக்கிட்டுப் பாடணும், அதைக் கேக்க எனக்கு ரொம்ப ஆசை என்று இவளுக்கும் கற்றுக் கொடுத்தாள். அப்பா வீட்டில் இல்லாத போது இவளும் அம்மாவும் சேர்ந்து இந்தப் பாட்டைப் பாடுவார்கள்.

ஒருமுறை மீரா பள்ளிக்கூடப் பாட்டுப் போட்டியில் இந்தப் பாட்டைப்பாடி பரிசும், பாராட்டும் பெற்றாள். அதுதான் அவள் வாய்விட்டுப் பாடிய கடைசி வாய்ப்பு. அம்மாவின் மரணத்திற்குப் பிறகு அப்பா மறுமணம் புரிந்து ஒரு அரக்கியை சின்னம்மாவாய்க் கொண்டு வந்தார். இவள் வாழ்வு அடிமை வாழ்வாயிற்று. பள்ளிக்கூட நேரம் தவிர விளையாடக்கூட வெளியே போக முடியாது.

வீட்டு வேலை முடித்து அப்பாவும், சித்தியும் வருவதற்குள் மொட்டை மாடியில் சுதந்தரமாக பத்து நிமிடமாவது சுற்றியுள்ள உலகைக் கண்டு மகிழ்ந்து, சுதந்தரக் காற்றைச் சுவாசித்து அம்மா கற்றுத் தந்த பாட்டை மெல்ல முணுமுணுத்து விட்டு வீட்டிற்குள் வந்துவிடுவாள். இந்தக் குடியிருப்பைச் சுற்றி நிறைய வீடுகள் தனி பங்களா வீடுகள் உண்டு. சற்றுத்தள்ளி 4-ஆவதாக ஒரு புது வீடு சில மாதங்களாக உருவாகியது



முடிவடைந்திருந்தது. சில தினங்களுக்கு முன்னதாக லாரியில் சாமான்கள் வந்திறங்கின.

இன்று மாடிக்கு வந்தபோது புதிதாக ஒரு தேவகானம் செவியில் பாய்ந்தது. இயல்பாக இசைஞானம், இசையார்வம் மிகுந்த இவள் அதை உற்றுக் கேட்டாள். சில வீடுகள் தள்ளி ஒரு வீட்டிலிருந்துதான் அந்தக் கானம் வந்திருக்க வேண்டும் அப்பா வரும் நேரமானதால் மேற்கொண்டு தாமதியாமல் கீழே வந்துவிட்டாள். செவியில் விழுந்த அந்த இனிய இசைமட்டும் உள்ளே தங்கி ஆர்வமூட்டிய வண்ணம் இருந்தது. தொடர்ந்து தினமும் அந்த இசை மாடியில் வந்தபோது கேட்டது. எப்படி-யாவது அது வருமிடத்தைக் கண்டுபிடிக்க ஆவல் உந்தித்தள்ள இன்று மொட்டை மாடிக்குப் பதில் தெருவில் இறங்கி ஆராய்ச்சியைத் தொடர்ந்தாள். அந்தப் புது வீட்டிலிருந்துதான் இசை பாய்ந்தோடி வந்து கொண்டிருந்தது. அம்மாவைப் போலவே இவளுக்கும் இசையின்மீது ஆர்வம். மெல்ல அந்த வீட்டின் திறந்திருந்த கேட்வழியே நுழைந்து மூடியிருந்த கம்பிக்கதவுக்கு வெளியே படிவரை வந்து நின்று விட்டாள். துல்லியமான இனிய இசை அவளை மெய்ம்மறக்கச் செய்தது. கண்ணைமூடி விரல்களால் தாளம் இசைத்த வண்ணம் நின்றாள். அப்போது ஒரு கார் உள்ளே வந்ததையோ அதிலிருந்து வீட்டுச் சொந்தக்காரர் இறங்கி வந்து இவளருகில் நின்றதையோ இவள் உணரவே இல்லை. திடீரென்று இசை நின்றது. உடன் சுயநினைவு பெற்றபோது பக்கத்தில் நின்றவரைப் பார்த்து திடுக்கிட்டாள். அயலார் வீட்டு வாசல்வரை வந்த தவறு புரிந்து தவித்தாள். ஆனால் அவரோ இவளை இதமாகப் பரிவாகப் பார்த்தார்.

யார் பாப்பா நீ? என்று அன்புடன் கேட்டார். நான் இதே தெருவில் அந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் வசிப்பவள். இரண்டு மூன்று நாட்களாய் புதிதாய்ப் பாட்டுக்குரல் கேட்டது. அந்தக் குரலைத்தேடி தெருவில் வந்தபோது இந்த வீட்டிற்குள்ளிருந்துதான் அந்தப்பாட்டு வருவதைக் கண்டுபிடித்தேன். ஆர்வத்தால் யாரையும் கேட்காமல் இதுவரை

வந்து விட்டேன். மன்னிச்சிடுங்க சார் என்று பயந்து அழுதுகொண்டே சொன்னாள்.

அழாதே பாப்பா. ஒன்றும் பயப்பட வேண்டாம். உன் இசையார்வம் புரிகிறது. எனக்குப் பிடித்திருக்கிறது. நீ பாட்டுக் கற்றுக் கொண்டிருக்கிறாயா?

எங்க வீட்ல அதுக்கெல்லாம் விடமாட்டாங்க என்றாள்.

அப்போது அவர் அவள் குடும்ப விபரம் அவள் அடிமை வாழ்வு யாவும் கேட்டறிந்தார்.

இவர் தொழிலதிபர் சுந்தரம். இவர் மனைவி இசைப் பேரரசி மீனாட்சி. இவர்களுக்குக் குழந்தை இல்லை. அவர் மனைவி தன்னிசைக் குடும்பம் வளர வாரிசில்லையே என்று ஏங்க, இங்கு ஒரு இசைப்பிரியை புறக்கணிக்கப்படுவதை உணர்கிறார்.

நீ இங்கு வந்து பாட்டுக் கற்றுக்கொள்கிறாயா? உன் வீட்டில் வந்து கேட்கச் சொல்லவா? என்றார்.

ஐயய்யோ வேண்டாங்க. என் அப்பா மோசமானவர். என் சின்னமாவும் வரவங்ககிட்ட மரியாதையில்லாம பேசுவாங்க. நா வீட்டு வேலைக்குப் போய் சம்பாதிக்க வேண்டுமென்று வேலைக்கு இடம் பார்க்கிறார் அப்பா. அவங்களுக்கு என்னைவிட காசுதான் பெரிசு. காசு கெடைச்சா என்னையே வித்துடுவாங்க என்றழுதாள்.

இந்தக் கலைவாணியை விற்பதா? விடுவாரா அவர்? அவர் மனைவியின் நீண்ட நாள் ஆசை நிறைவேறும் தருணம் இது என்றுணர்ந்தார்.

சரிபாப்பா. நீ எதுவும் காட்டிக் கொள்ளாமல் எப்போதும் போல் இரு. நான் தந்திரமாக உன்னை மீட்டு விடுகிறேன் என்றார். அவர் கூறியது ஒன்றும் அவளுக்குப் புரியவில்லை.

மறுநாள் வீட்டு வேலைக்கு ஒரு சிறுமி வேண்டுமென்றும், நல்ல சம்பளம் தருவதாயும் இவள் தந்தைக்கு மூன்றாம் மனிதர் மூலம் செய்தி எட்டச் செய்தார். இவள் தந்தை உடனே இவர் வீடு தேடி வந்துவிட்டார். அந்த வேலை தன் மகளுக்கே



கிடைக்க வேண்டும், வேறு யாரேனும் வந்து விடக்கூடாதே என்ற பதற்றம்.

வந்தவரை, “யார் நீங்கள்?” என்றார் சுந்தரம். பெரிய மனுஷ தோரணையில் இருந்த சுந்தரத்தைப் பார்த்து மரியாதையுடன் கைகூப்பினார் மீராவின் அப்பா வேலாயுதம்.

உங்க வீட்டுக்கு வேலைக்குச் சிறுமி வேணுமின்னு கேள்விப்பட்டேன். என் மக மீரா பத்தாவதுவரை படிச்சு நின்னிடுச்சு சும்மாத்தானிருக்கு வீட்ல.உங்க மாதிரி நல்லவங்க வீட்ல வேலை கெடச்சா நல்லதுன்னு தேடி வந்தேன் என்றார்.

வீட்டு வேலை கொடுத்தா நல்லா செய்யுமா? என்றார் சுந்தரம்.

ரொம்ப நல்லாச் செய்யுங்க. சொன்னாப்பல செய்யும். ரொம்ப சாது என்றான்.

சரி! அழைச்சிட்டு வாங்க, நல்லா நடந்துகிட்டா தொடர்ந்து இருக்கலாம், வீட்டு நினைவா கவனமில்லாம இருந்தா திருப்பி அனுப்பிடுவேன் என்றார்.

அதெல்லாம் ஒழுங்கா நடந்துக்குங்க, இதோ அழைச்சிட்டு வந்திடறேன். மூணாவது வீடுதான் எங்க வீடு என்று கூறி விரைவாகச் சென்று, மீரா இங்க வா என்றான். பாதி வேலையா இருக்கேன்ப்பா என்றாள். அதெல்லாம் நா பாத்துக்கறேன் நீ வா என்று அவளை இழுத்து வந்து சுந்தரத்தின் வீட்டில் சேர்த்த பிறகுதான் நிம்மதியடைந்தான்.

சரி வேலாயுதம். பாப்பா இங்க இருக்கட்டும். பார்ப்போம் என்று ஒரு ஆயிரம் ரூபாய்த் தாளை எடுத்து நீட்டினார்.

நன்றிசார். நா வறேன் என்று பரம சந்தோஷத்துடன் போய்விட்டார். அவர் போனபிறகு, பாப்பா! உன்னை நான் எப்படி வரவழைத்தேன் பார்த்தாயா? என்றார் சுந்தரம்.

ரொம்ப நன்றிசார் என்று அவர் காலில் நமஸ்கரித்த மீராவை எழுந்திரு, எழுந்திரு என்று தூக்கிவிட்டுச் சரிவா என்று உள்ளே அழைத்துப் போனவர், ஒரு அறை வாசலில் நின்று மெல்லக் கதவைத் தட்டினார்.

இதோ வந்துட்டேங்க என்ற இனிய குரலைத் தொடர்ந்து ஓரன்பு தெய்வம் வெளிப்பட்டது.

மீனா! உன் மகள் வந்துவிட்டாள் பார் என்று மீராவைக் காட்டினார்.

இவளுக்குப் புரியவில்லை. இவர்கள் இழந்துவிட்ட பெண்போல் நானிருக்கிறேன் போலும் என்று நினைத்தாள்.

மீனா நான் சொன்னேனே உன் பாட்டைக் கேட்டு நம்வீட்டு வாசலில் மயங்கி நின்றாள் என்று அவள் இந்த மீராதான் என்று மீராவைத் தன் மனைவிக்கு அறிமுகம் செய்தார்.

வா மீரா வா என்று சிறு குழந்தையை நோக்கி இரண்டு கைகளையும் நீட்டும் தாயைப் போல் கையை நீட்டி அழைத்தாள்.

மீனா என்ற இசைப் பேரரசி!

மீரா தயங்கினாள். வீட்டு வேலைக்கு வந்த பெண்ணைத் தான் பெற்ற பெண்ணை அழைப்பது போல் அழைக்கிறாரே, நான் வேலைக்கு வந்தவள் என்று தெரியாதோ என்று தயங்கி நின்றாள். மீரா! நீ மயங்கி நின்று கேட்ட பாட்டைப் பாடியது இவங்கதான் என்றார் சுந்தரம்.

அவ்வளவுதான் விழிகள் மலர்ந்து ஓடிப் போய் அவர்களின் கால்களைப் பற்றினாள்.

அன்புடன் அவளை வாரியணைத்து நெற்றியில் முத்தமிட்டாள் மீனாட்சி. கலைவாணி என் பிரார்த்தனைக்குச் செவி சாய்த்துவிட்டாள். நான் தேடிய என் இசைக் குடும்ப வாரிசு என்னைத் தேடி வந்துவிட்டது என்றாள். மீராவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. இவங்க என்ன சொல்றாங்க என்று மீரா விழித்தாள்.

மீரா! அதுவொன்றுமில்லை. தனக்குப் பிறகு இசையுலகிற்கு ஒரு வாரிசு தயாரிக்க அம்மாவுக்கு ஆசை. எங்களுக்குக் குழந்தை இல்லை. விளம்பரம் செய்தால் தேவையற்றவர்களும் தேடி வருவார்கள். அம்மாவின் கனவில் கலைவாணி ஒரு குழந்தையைக் கொடுத்தது போல் கண்டாள். அன்றிலிருந்து



இவள் தன்னைக் தேடிவரும் குழந்தைக்காகக் காத்திருந்தாள். நீ தான் இசையார்வத்தோடு இந்த வீட்டைத் தேடி வந்து உன் இசையார்வம் வெளிப்பட மயங்கி நின்றாய். நீதான் கலைவாணி தந்த பரிசு என்றார் சுந்தரம்.

சரிங்க நான் இப்ப என்ன வீட்டு வேலை செய்யணும்னு சொன்னா செய்வேன் என்றாள் மீரா.

வேலையா? நீ இந்த வீட்டு வேலைக்காரி இல்லை. உன் அப்பாவிடம் சொன்னது அவர் விருப்பப்படி உன்னை அவரிடமிருந்து மீட்கத்தான். நீ இந்த வீட்டு இளவரசி என்றார். அவளுக்கு ஒரே குழப்பம்.

சரி, சரி வா முதலில் சாப்பிடுவோம். பிறகு உனக்கு இசைப் பயிற்சி ஆரம்பிக்க வேண்டும் என்று சுந்தரமும் மீனாட்சியும் அவளுடன் சேர்ந்து உணவருந்தினர். இத்தனை சுவையான உணவை இத்தனை பரிவாக அவளுக்கு அவள் அம்மாவைப் போல உண்ணச் செய்தனர். கண்கலங்கியது. எதைப் பற்றியும் நினைக்காமல் சந்தோஷமாய்ச் சாப்பிடு என்றனர்.

பிறகு மீனாட்சி சங்கீத அறை என்ற அறைக்கு அவளை அழைத்துச் சென்றாள். பிரமிப்பால் விழிகள் விரிய நின்றாள். அத்தனை அழகாக அந்த அறை வடிவமைக்கப்பட்டிருந்தது. மேடையில் அழகான கலைவாணி சிலை. அதன் விழிகள் பேசின. தம்புரா, வீணை, ஆர்மோனியம் என பல இசைக் கருவிகள். அதற்கு முன் எதிரே உட்கார்ந்து பாட அழகான தரை விரிப்புகள். இவற்றைக் கண்டு மெய்சிலிர்த்தது அவளுக்கு. தன் அம்மாவை, அவள் இசையார்வத்தை, தானும் எம்.எஸ். அவர்களைப் போல் பாட வேண்டும் என்று ஆர்வப்பட்டதை எல்லாம் நினைத்து கண்ணீர் பெருக கலைவாணியை நமஸ்கரித்தாள்.

மீனா அவளை அணைத்துக் கொண்டு தன் புடவைத் தலைப்பால் அவள் கண்ணீரைத் துடைத்து அழக்கூடாது, இனி உனக்குத் துன்பமில்லை. மகிழ்ச்சி மட்டும்தான் என்றாள்.

எங்க அம்மா ரொம்ப நல்லாப் பாடுவாங்க அவங்க இஷ்ட தெய்வமே எம்.எஸ் என்ற இசையம்மாதான். எம்.எஸ் அம்மா கச்சேரி எங்க நடந்தாலும் எங்க தாத்தாவோட போய்

முன்வரிசையில் இருந்து ரசிப்பாங்களாம். அவங்க குரல கேட்டாலே எங்க அம்மா சந்தோஷமா உணருவாங்களாம். அவங்க மேல ஒரு பக்தியே வந்ததாம். ஒரு முறை கச்சேரி முடிந்த பிறகு நீண்ட நேரம் காத்திருந்து அவங்களை கிட்டப் போய்ப் பார்த்து பேசினாங்களாம். உங்களையும், உங்கப் பாட்டையும் எனக்கு ரொம்பவே பிடிக்கும், நீங்க பக்த மீரா பாட்டைப் பாடும்போதெல்லாம் உங்களை மீராவாகவே பார்க்கிறேன். எனக்குப் பெண் குழந்தை பிறந்தா மீரானு பேர் வெச்சு உங்க பாட்டைக் கத்துக் கொடுப்பேன்னு சொன்னாங்-களாம். கடவுள் அருளால் உன் ஆசை நிறைவேறும் என்றுகூறி அன்று மேடையில் அவருக்குப் போர்த்திய பொன்னாடையை அம்மாவுக்குக் கொடுத்தாங்களாம். அதை என் அம்மா பத்திரமா வெச்சிருந்து, நீ எம்.எஸ் அம்மா மாதிரி பாடும்போது இதை உனக்குப் போர்த்தி விடுவேன் என்று என்னிடம் பேராவலுடன் சொல்வாங்க. அதை நானும் பத்திரமா வெச்சிருக்கேன். ஒருநாள் அதைக் கொண்டுவந்து காட்டுகிறேன், என்றாள்.

இசைப்பயிற்சி காலையில் சங்கீத அறையில் நடந்தது. வெளியில் யாருக்கும் தெரியாது. மீனாட்சிக்கு இவள் இசை ஞானம் பிரமிப்பூட்டியது. சென்ற பிறவியிலேயே இசை பயின்றிருப்பாளோ என்று வியப்பாள். முதற் கட்டப் பயிற்சியை அப்போதே கடந்து விட்டாள். குறைந்த பட்சம் ஒரு வாரமாவது ஆகும் இக்கட்டத்தை ஒரே முறையிலே தாண்டிவிட்டாள்.

உங்க அம்மா ரொம்ப நல்லாப் பாடுவாங்கன்னு சொன்னாயே அவங்க யார்கிட்ட சங்கீதம் கத்துக்கிட்டாங்க.

அதுதானே ஆச்சர்யம். அவங்களுக்குப் பாட்டுக் கத்துக்க வாய்க்கவேயில்லையாம். எம்.எஸ். அம்மா பாட்டைக் கேட்டுக் கேட்டுப் பாடுவாங்களாம். அம்மாவோட ஆசைய நிறைவேத்த தாத்தா தனக்குப் தெரிந்த பெரிய மனுஷங்கக்கிட்டயிருந்து டேப் ரிகார்டரும் கேஸட்டும் வாங்கி வருவாராம். அதைப் போட்டுப் போட்டுப் பாடிக் கத்துக்கிட்டாங்களாம். அதெவிட பெரிசா ஒண்ணு சொல்லுவாங்க. புதுச்சேரி அன்னை அரவிந்தர் சமாதியிலே வேண்டினா பலிக்கும்னு கேள்விப்பட்டு தாத்தாவோட புதுச்சேரிக்கே குடிபோயிட்டாங்களாம். தாத்தாவும்



அங்க ஒரு கடையில கணக்கெழுதற வேலையில சேர்ந்-திட்டாராம். அப்போ அன்னை அரவிந்தர் ஆசிபெற்று அவர்களையே தன் இலட்சியமா ஏத்துக்கிட்டு ஆன்மிகத்தில வாழ்ந்த குருவைப் பத்தி கேள்விப்பட்டு அவங்கள தினமும் போய்க் கும்பிடுவாங்களாம், கல்யாணம் நிச்சயமானதும் அவர்கிட்ட ஆசி வாங்க போனாங்களாம். எனக்குப் பெண் குழந்தை பிறந்து அது எம்.எஸ். அம்மாவைப் போல் பாடுமான்னு குருகிட்ட கேட்டாங்களாம். அப்ப, “பெண் உண்டாயிருக்கிறப்ப எப்படி இருக்கணும்னு மதர் (ஸ்ரீ அன்னை) சொன்னது போல நீ இருந்தா அப்படியே ஆகும்னு” சொன்னாராம். மதர் என்ன சொல்லியிருக்காங்கன்னு சொன்னீங்கன்னா அதுபோலவே செய்வேன்னு சொன்னாங்களாம் அம்மா. அப்ப குரு கேட்டாங்களாம், நீ ஏன் எம்.எஸ் மேல இவ்வளவு பிரியமா இருக்கேன்னு. அதுக்கு அம்மா, மொதல் மொதல்ல மேடையில அவங்கள பாத்தப்ப எல்லாரும் மீரா பாட்டை பாடணும்னு சீட்டு எழுதி கொடுத்ததையும் அப்ப அவங்க பாடின மீரா பாட்டுதான் (சராசரம் உன்னை யாவும் தேடுமே. மறைகளும் மகிழ்ந்-துன்னைப் பாடுமே) அம்மாவை எம்.எஸ். பைத்தியம் ஆக்கிடுச்சின்னு சொன்னதோட அந்தப் பாட்டை குருநாதர் கேக்கணும்னு அந்தக் கேஸட்டை வாங்கி குருவுக்குச் சமர்ப்பிச்-சாங்களாம். குருவும் அந்தப் பாட்டைக் கேட்டு எம்.எஸ். அம்மாவைப் புகழ்ந்தாங்களாம். அப்போதான் எம்.எஸ் அம்மாவுக்குப் ‘பாரத ரத்னா’ விருது அறிவிச்சாங்களாம். உடனே அம்மா குருநாதர் காலில் விழுந்து வணங்கி இந்தப் பாட்டை நா ஒங்ககிட்ட சமர்ப்பிச்ச வேளை எம்.எஸ். அம்மாவுக்கு ‘பாரத ரத்னா’ விருது கெடச்சுடுத்து. நமக்கு எவ்வளவு திறமை இருந்தாலும் அருள் கிடைத்தால்தான் எல்லாம் நடக்கும்னு எங்க அப்பா சொன்னாங்க என்று கூறி ஆனந்தப்பட்டாங்களாம். குரு சிரித்துக் கொண்டாராம். இதை-யெல்லாம் எங்க அம்மா பக்தியோட எங்கிட்ட சொல்வாங்க. கடைசியா என்னை உண்டான போதுதான் குருவை தரிசிச்-சாங்களாம். “இப்போ நீ எந்த மன நிலைல இருக்கணும்னு அன்னை சொன்னதெல்லாம் நினைவில் வெச்சுசெய்” என்று

சொன்னாராம். அது போலவே எங்க அம்மா என்னை கருவுற்ற போது தன் வயிற்றைத் தடவிக் கொடுத்து உள்ளே உள்ள என்னிடம் பேசுவாங்களாம். நீ எம்.எஸ்.அம்மா போல நல்லா பாடணும். பக்தியா இருக்கணும். அவங்க சம்பாதிச்ச பணத்தை-யெல்லாம் தானே வெச்சுக்க நினைக்காம நிறைய நல்ல காரியத்துக்கெல்லாம் கொடுத்தது போல நீயும் நல்ல மனசோட வாழணும்னு சொல்வாங்களாம். நானும் எம்.எஸ். அம்மா போல பாடுற மாதிரி என்னைக் கற்பனையிலே பாப்பாங்களாம் என்று மீரா தன் அம்மாவைப் பற்றி உணர்வுடன் கூறுகிறாள். இதையெல்லாம் கேட்ட மீனாட்சி, “மகான்களின் வாக்கு பொருள் பொதிந்த வாக்கு என்பார்கள். உன் அம்மா குருவருள் பெற்றிருக்கிறார். அவர் கற்பனையில் கண்டது போல் நீயும் இசையரசி ஆவாய். அப்போது அந்தப் பொன்னாடையை உன் அம்மாவின் நிலையிலிருந்து நானே உனக்கு அணிவிப்பேன்” என்று கூறுகிறாள். மேலும் அதற்கு உன்னைத் தயாரிக்க நீ எங்களுடன் இங்கேயே இருந்தால் நல்லது. உன் அப்பா அதற்கு விடுவாரா? என்றாள் மீனாட்சி.

தெரியல அம்மா. மாலைல வீட்டுக்குப் போனதும் சின்னம்மா நெறய வேல வெச்சிருக்கும் என்று வேதனையுடன் சொன்னாள்.

சுந்தரம் வந்தார். என்ன மீனா. குழந்தை என்ன சொல்கிறாள்? என்றார்.

பாவம்ங்க இவ. வீட்ல போய் வேற சின்னம்மா வேல செய்யச் சொல்றாங்களாம். இவ இங்க நம்ப கூடவே இருந்தா இவள தயாரிக்க வசதியா இருக்கும். இவ்வளவு சங்கீத ஞானம் உள்ள குழந்தையை அர்த்தமில்லாமல் வாழ விடக்கூடாதுங்க என்று மீனா வேதனையுடன் கூறினாள். அவ்வளவு தானே நாளைக்குப் பார் என்றார் சுந்தரம்.

ஐயய்யோ எங்க அப்பாவைக் கேட்டீங்கன்னா எங்க சின்னம்மா என்னை விடக்கூடாதுன்னு வேலைய விட்டு நின்னுடச் சொல்லும் என்று அழுதாள் மீரா.



கவலைப்படாதே மீரா. உன்னை எப்படி மீட்பது என்று எனக்குத் தெரியும். வழக்கம் போல் நீ எதையும் காட்டிக் கொள்ளாமல் இரு. நான் பார்த்துக் கொள்கிறேன் என்றார்.

மறுநாள் வேலாயுதத்தைக் கூப்பிட்டனுப்பினார். அவரும் வந்தார். வேலாயுதம் உங்கள் மகளை இதுவரை அனுப்பியதற்கு ரொம்ப நன்றி. ஆனா எங்களுக்கு வீட்டோட இருக்கிற மாதிரி குழந்தைதான் தேவைப்படுது. அதனால நா அநாதை ஆஸ்ரமத்திலேந்து ஒரு குழந்தையைத் தத்தெடுப்பது என்று முடிவு செய்து விட்டேன். இந்தா இந்தப் பணத்தை வைத்துக் கொள் என்று பத்தாயிரம் பணத்தைக் கொடுத்தார். உம் மகளை அழைத்துப் போய்விடு என்றார். மீனாவும், மீராவும் மறைந்து நின்று இதைக் கேட்டுத் திடுக்கிட்டனர்.

ஐயா! மீராவை முழு நேரமும் ஒங்க வீட்லயே வெச்சுக்கங்க எனக் கொண்ணும் ஆட்சேபணை இல்லை என்றார் வேலாயுதம்.

அதெல்லாம் சரி வராதுப்பா. நா கஷ்டப்பட்டு வளத்து ஆளாக்கினா, நாளை எம்மகள எங்கூட அனுப்புங்க என்பாய். அநாதைக் குழந்தைனா பிரச்சனை வராது, சட்டப்படி தத்தெடுத்திடுவேன் என்றார்.

எம்மகளும் ஒரு விதத்துல அநாதை போலதான். அதன் அம்மா இறந்திடிச்சு. வீட்ல இருக்கறது என் ரெண்டாவது சம்சாரம். அதுனால எம் மகளையே தத்தெடுத்துக்கங்க. நாதிருப்பிக் கேக்கல. கேக்கற எடத்துல கையெழுத்துப் போட்டுத் தாறேன். உங்களால அது வாழ்க்கை நல்லா அமையட்டும் என்றார்.

நாளைக்கு ஏதாவது நீ பிரச்சனை செய்தா நா சும்மாயிருக்க மாட்டேன். சட்டப்படி அவளை எங்களுக்குத் தத்துக் கொடுத்தா நீ வந்து தொந்தரவு செய்யக் கூடாது.

ஐயா! என்னெய நம்புங்க. நல்லவங்க தெரிஞ்சவங்க நாலு பேரை சாட்சி வெச்சு கையெழுத்துப் போட்டுத் தறேன் என்றார்.

உன் சம்சாரம் ஏத்துக்குமா?

அவளை நா பேசிக்கிறேன். இது எம்மவ, அவ ஒண்ணும் சொல்ல முடியாது என்றார்.

மீராவுக்கு இப்போதுதான் அப்பா மீது நன்றி எழுந்தது. இந்தப் பேச்சை மறைவில் நின்று கேட்ட மீனாட்சி மீராவைக் கட்டியணைத்துக் கொண்டாள்.

இத வெச்சுக்கங்க என்று பத்தாயிரம் ரூபாயைக் கொடுத்து நாளைக்குக் கூப்பிட்டனுப்புகிறேன் என்றார். பொறுப்புவிட்டது என்று அவர் போய்விட்டார்.

மறுநாள் சட்டப்படி சுவீகாரமும் செய்து மீராவை மீனாட்சி சுந்தரம் தம்பதியர் மகளாக்கிக் கொண்டனர். வேலாயுதத்தைப் பார்க்கும் போதெல்லாம் அருமையான குழந்தையைப் பெற்ற தந்தை என்ற முறையில் மனதில் நன்றியோடு அவருக்குப் பணமும் கொடுத்தார் சுந்தரம். வேலாயுதத்தின் மனைவிக்குப் பணி மாற்றல் வந்து அவர்கள் ஊரைவிட்டே போய்விட்டதாக செய்தி.

மீரா! இனி நீ இந்த வீட்டின் இளவரசி. என் இசைக்குடும்ப வாரிசு. பாத்ரூமில் ஷாம்பு, சோப் புதிய ஆடை எல்லாம் வைத்திருக்கிறேன். பழைய வாழ்வை தலை முழுகி விட்டு என் மகளாய் வா என்றாள் மீனாட்சி.

மீராவுக்கு மகிழ்ச்சி, சுதந்தர உணர்வு. அழகான பாத்ரூம். மணமுள்ள உயர்தர ஷாம்பு, சோப், ஆசை தீர ஷவரைத் திறந்து விட்டு அம்மாவின் மீரா பாட்டை வாய்விட்டுப் பாடிய வண்ணம் நீராடினாள். பாட்டுக் குரல் கேட்டதும் மீனாட்சி, பாத்ரூம் கதவுக்குப்பின் வந்து நின்று கொண்டு ரசித்தாள். எத்தனை இனிமை குரலில் எப்படியெல்லாம் தூக்கி எடுத்து பிசிர் இல்லாமல் லயம் தப்பாமல் பாடுகிறாள். கலைவாணியே நீ எனக்கு அரிய இசைப் பொக்கிஷத்தைக் கொடுத்திருக்கிறாய் இசைக் குடும்பத்தை வளர்ப்பதே நான் உனக்குச் செய்யும் நன்றி என்று மனம் உருகினாள். தலையில் துண்டைச் சுற்றிக் கொண்டு புதிய ஆடைகளுடன் கதவைத் திறந்த மீரா, மீனாட்சியைப் பார்த்தவுடன் வெட்கத்துடன் நாக்கைக் கடித்துக் கொண்டாள். அதீத உரிமையுடன் சப்தமாகப் பாடிவிட்டோமோ என்று, சாரிம்மா. இத்தனை நாள் அடக்கி வைத்திருந்த ஆசை சுதந்தரம் கிடைத்தவுடன் வெளிப்பட்டுவிட்டது. தவறு செய்ததாய் எண்ணி மன்னிப்பு வேண்டினாள்.



இப்படியெல்லாம் பேசினால் நான் மன்னிக்க மாட்டேன். எதன் வளர்ச்சிக்கும் தேவை சுதந்தரம்தான். நீ எப்போதும் வாய்விட்டுப் பாடலாம். இந்த வீடு முழுவதும் உன்னிசையால் நிரம்பி மகிழ வேண்டும் என்றாள்.

காலை வேளையில் தினமும் மீராவிற்கு முறையான சங்கீதப் பயிற்சி. மதியமும் இரவும் மீனாட்சியின் மேடைக் கச்சேரிக்கான பயிற்சி. மீனா பாட வேண்டிய பாடல்களை பிரிண்ட் எடுத்துத் தரும் வேலை மீராவுடையது. மீனா சாதகம் செய்யும் போது மீரா வேறு வேலைகளில் ஈடுபட்டிருப்பாள். இருந்தாலும் கவனம் மீனா பாடும் பாட்டிலிருந்தது பாட்டில் அவள் செய்யும் ஸ்வரஜாலங்கள் மீராவை மிகவும் கவர்ந்தது. இவளின் இசையார்வத்திற்கு அளவேயில்லை.

முதலில் தன் கச்சேரிக்கு மீராவைத் தம்புரா மீட்ட அழைத்துப் போனாள். அந்த இளம் அழகிய மீரா தம்புராவுடன் பக்கத்தில் அமர்ந்திருந்தது பக்த மீராவாகவே காட்சியளித்தாள். இழை பிசகாமல் தம்புரா மீட்டினாள். மீனாட்சி வழக்கம்போல் ரசிகர்களைத் தன் இனிய குரலாலும், இசை நயத்தாலும் பரவசத்திலாழ்த்திக் கொண்டிருந்தாள். மத்தியமாவதி பாடுவதற்கு முன் அன்று வித்தியாசமாக, ‘சராசரம் உன்னை யாவும் தேடுமே’ என்ற பக்தமீரா திரைப்படப் பாடலைப் பாடினாள். மீனாட்சி தன் கச்சேரி நிகழ்ச்சியில் முதன்முதலாகத் திரைப்படப் பாடலைப் பாடுவதால் ரசிகர்களின் மகிழ்ச்சி ஆரவாரம் சபையை நிறைத்தது. உணர்ச்சி மேலிட உருகிப் பாடிய மீனாவிற்கு ஒரு கட்டத்தில் அடுத்தவரி பாட-முடியவில்லை. அவள் பாடும் போது கவனமாக அவளைப் பின்பற்றும் மீரா இப்போது இடைவெளி தோன்றாமல் சட்டென்று அடுத்த வரியைப் பாட சபையினரின் கரகோஷம் விண்ணைப் பிளந்தது. முதல் ஆரம்பத்திலேயே மீரா தன் இனிய குரல் வளத்தாலும், இசை ஞானத்தாலும் ரசிகர்களை வசீகரித்து விட்டாள். மீனாட்சி மிகுந்த பெருமிதவுணர்வுடன் மீராவைத் திரும்பிப் பார்க்க மீரா இயல்பாகச் சிரிக்கிறாள். நிகழ்ச்சி முடிந்து வீடு திரும்பியதும் சமையல்கார அம்மாள் ஆரத்தி எடுக்கிறாள். மீனாட்சியோ மீராவுக்குத் திருஷ்டி கழிக்கிறாள். அப்போதுதான்

உள்ளே வந்த சுந்தரம் என்ன விசேஷம் இன்று? என்கிறார். ஏங்க இன்று பார்த்து நீங்கள் வராது போனீர்கள். நம் குழந்தை மேடையில் பாடி பெரிய பாராட்டு வாங்கி விட்டாள் என்றாள் மீனாட்சி. சுந்தரம் பெரும்பாலும் மீனாவுடன் கச்சேரிக்கு வந்து முதல் வரிசையில் உட்கார்ந்து ரசிப்பார். ஏதேனும் முக்கிய மீட்டிங் இருந்தால் வரமுடியாது போகும். அன்றும் அப்படித்தான் வரமுடியாமற்போனது. அதுசரி குழந்தை இன்று பாடப் போகிறாள் என்று நீ ஏன் சொல்லவில்லை. முறையாக அரங்கேற்றம் செய்ய வேண்டாமா? என்றார். அவள் அம்மா குருவருள் பெற்று மீராவிற்கு ஆசி, வரம் வாங்கியிருக்கிறாள். அரங்கேற்றம் என்ற சடங்கு சம்பிரதாயமெல்லாம் அவளுக்குத் தேவையில்லை என்று தோன்றுகிறது என்றாள் மீனா. என்ன சொல்கிறாய் நீ? ஆமாங்க. இறையருள் துணையிருந்தால் சந்தர்ப்பம், சூழ்நிலை யாவும் தானே அமைந்துவிடும். அவளைக் கருவில் தாங்கியபோது அவள் குருவிடம் வரம் வாங்கி இருக்கிறாள். கருவுற்றபெண் அன்னை கூறியபடி எப்படியிருக்க வேண்டுமென குருவிடம் அறிவுரை பெற்று அதன்படி மீராவை வயிற்றில் சுமந்த காலத்தில் இலட்சியவுணர்வோடு இருந்திருக்கிறாள்.

என்ன சொல்கிறாய்? எந்த அன்னை என்ன கூறியிருக்கிறார்?

புதுச்சேரியில் ஸ்ரீ அரவிந்தரோடு பூரணயோகம் மேற்கொண்ட ஸ்ரீ அன்னையைச் சொல்கிறேன். கருவுற்ற பெண் தன் சிந்தனைகள், எப்போதும் அழகானவையாகவும் தூயதாகவும் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமாம். அவள் தன் உணர்ச்சிகள் உயர்ந்தவையாகவும், பண்பு நயமுடையதாகவும் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமாம். அதோடு அவளால் எண்ணிப் பார்க்க முடிந்த அளவு மிகவுயர்ந்த இலட்சியத்தின்படி குழந்தையை உருவாக்க வேண்டும் என்ற திட்டவட்டமான உணர்வுள்ள இச்சா சக்தியும் அவளிடம் இருந்தால் அப்பொழுது அக்குழந்தை அதிகபட்ச வாய்ப்புகளுடன் இவ்வுலகில் வந்து பிறப்பதற்கு வேண்டிய மிகச் சிறந்த நிலைமை அளிக்கப்பட்டதாகும் என்று அன்னை



கூறியதை மீராவைக் கருவுற்றிருந்த போது குருநாதரிடம் ஆசி பெறச் சென்றபோது அவர் சொன்னாராம்.

அம்மா! மிளகாயெல்லாம் வைத்துச் சுற்றினீர்களே அது என்ன?

அதுவா? இன்று அத்தனை பேர் கண்களும் உன்மேலதான். உனக்கு ஒன்றும் ஆகிவிடக்கூடாது என்று கண்ணேறு (திருஷ்டி) கழித்தேன் என்றாள்.

அடுத்த மேடை நிகழ்ச்சியின் போது ரசிகர்கள் கைதட்டல் அதிர்ந்தது. மீராவும் பாடுவாள் என்று அனைவரும் எதிர்பார்த்து கைதட்டினர். ஆனால் மீரா தம்புரா மட்டுமே மீட்டினாள். அவளும் பாட வேண்டுமென சீட்டெழுதி அனுப்பினர். பாடிக்கொண்டே பின்னால் திரும்பி சீட்டை மீராவிடம் கொடுத்து என்ன செய்வது என்று கேட்பதுபோல் பயத்துடன் பார்த்தாள். கவலை வேண்டாம் என்பதுபோல் கண்ணால் பேசிய மீரா அவளுடன் இணைந்துபாட ஆரம்பித்து விட்டாள். கூட்டத்தினர்க்கு வியப்பில்லை, மகிழ்ச்சி. மீனாட்சிக்குப் பெரும் வியப்பு. பக்த மீரா பாடல் மீரா அவள் அம்மாவிடம் கற்றது. தான்தன் இசை நிகழ்ச்சிக்குச் சாதகம் செய்யும் போது அவளையும் உடன் வைத்துக் கொண்டதில்லை. அவள் ஏதேனும் செய்து கொண்டிருப்பாள். அப்படியிருக்க இது எப்படி சாத்தியமாயிற்று. தனக்குப் பாடல்கள் பிரிண்ட் எடுத்துக் கொடுப்பது அவள்தான். ஆனால் அதனால் மட்டும் பயிற்சி இல்லாமல் எப்படிப் பாடமுடியும்? உண்மையில் இவள் தவமியற்றிப் பெற்ற குழந்தைதான். கலைவாணி கொடுத்த பரிசுதான். ஆனந்த மிகுதியில் பாடமுடியாமல் ஆனந்தக்கண்ணீர் வர, மீரா தன்னை மறந்து பாடிக்கொண்டிருக்கிறாள். இசை நிகழ்ச்சி முடிந்ததும் இவ்வளவு விரைவில் ஓரிளம் பெண்ணைத் தயாரித்து விட்டதாக மீனாட்சியைக் கூட்டமே பாராட்டிப் பேசியது. இந்த மாயப் பெண்ணைத் தான் தயாரிக்கவில்லை கலைவாணியே தயாரித்தாள் என்பது மீனாட்சிக்குத் தெரிந்தது. வீட்டிற்குப் போனதும் முதல் வேலையாக மீராவைக் கட்டியணைத்து நெற்றியில் முத்தமிட்டு 'உச்சிதனை முகந்தால் கருவம் ஓங்கி வளருதடீ' என்று பாடினாள் மீனாட்சி. மீரா

சிரித்துக் கொண்டே, அம்மா! நல்லவேளை வீட்டிற்கு வந்து முத்தமிட்டீர்கள். எங்கே மேடையிலேயே கட்டியணைத்து முத்தமிட்டு விடுவீர்களோ என்று பயந்தேன் என்றாள். நல்லவேளை மீரா, இன்று மேடையில் நீ உன் அம்மாவுடன் சேர்ந்து பாடியதை நானும் கேட்கும் பேறு பெற்றேன். அதுசரி எதற்கு பயந்தேன் என்றாய்?

அதுவொன்றுமில்லையப்பா, காலையில் எனக்கு ஸ்வர வரிசை கற்பிக்கும்போது பாதி பயிற்சியிலேயே கட்டியணைத்துக் கொள்வார். அதுபோல் அங்கும் பாதியில் செய்துவிடுவாரோ என்று பயந்தேன் என்று அம்மாவைக் கேலி செய்தேன் என்றாள்.

நன்றாகச் செய். இப்படி ஒரு குழந்தையை எண்ணித்தானே அவள் ஏங்கினாள். அவள் சந்தோஷமாய் இருந்தால் சரிதான் என்றார் சுந்தரம்.

இதற்குப் பிறகு காலையில் வழக்கமான முறையான பயிற்சியும் கொடுத்தாள். தன் மேடை நிகழ்ச்சிக்குச் சாதகம் செய்யும் போதும் அவளை உடனிருத்தி இருவரும் சேர்ந்தே சாதகம் செய்தனர். (இதை இங்கு எழுதும் போது எம்.எஸ். அவர்களும், அவர் மகள் ராதா விஸ்வநாதனும் சேர்ந்து அவர்கள் வீட்டில் சாதகம் செய்த காட்சி என் மனக் கண்ணில் வந்து ஆனந்தக்கண்ணீர் வருகிறது).

இப்படி இவர்களிருவரும் மேடையில் ஒருங்கிணைந்த குரலில் ஸ்வரம் லயம் தவறாமல் பாடும் அழகு பரவி இவர்கள் நிகழ்ச்சிக்கு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்புக் கிடைத்தது.

குறிப்பாக முரளிதரன் என்ற இளைஞன் சிறிது சங்கீதப் பயிற்சியும், பெரும் சங்கீத ஞானமும் உள்ளவன் தவறாது இவர்கள் இசை நிகழ்ச்சியைக் கேட்க வருவான். ஒருநாள் மீனாட்சியைத் தேடி வீட்டிற்கே வந்தான். தனியாக அல்ல, இவனை வளர்த்த அநாதை ஆஸ்ரமத் தலைவருடன். அவன் இசையார்வம், இசை ஞானம்பற்றி எடுத்துக் கூறிய ஆஸ்ரமத் தலைவர் பூபதி, அவனுக்கு இசைப் பயிற்சி தர வேண்டும் எனப் பணிவாக வேண்டினார். காலையில் மீராவின் பயிற்சி நேரத்தில் அவனுக்கும் பயிற்சி கொடுத்தாள். நாளடைவில் மீராவும்



முரளியும் இணைந்து பாடும் அளவு அவர்கள் பயிற்சி வளர்ந்து சிறப்பானது.

மீராவிற்குத் திருமண வயது வந்துவிட்டது என்று எண்ணிய மீனாட்சி அவள் இசையை ஆதரித்து வளர்க்கும் மாப்பிள்ளை வேண்டுமென்றும், மீராவைப் பிரிந்திருக்க இயலாததால் தங்களுடன் சேர்ந்தே மீராவும் மாப்பிள்ளையும் இருக்க வேண்டுமென்றும் ஆசைப்பட்டு, கணவரிடம் இதுபற்றி கலந்தாலோசித்தாள்.

முரளியை மணக்க மீரா விரும்பினால் ஆஸ்ரமத் தலைவருடன் பேசலாம் என்றார் சுந்தரம். அவர்கள் விருப்பமும் அறிய வேண்டும் என்று நினைத்தனர்.

மீராவை அழைத்து, மீரா உனக்குத் திருமணம் செய்விக்க மாப்பிள்ளை பார்க்கப் போகிறோம். உனக்கு எப்படிப்பட்ட வரன் வேண்டும் என்று சொல் என்றாள் மீனாட்சி.

உங்கள் விருப்பம் தானம்மா என் விருப்பம் என் இசை வீணாவதை நீங்கள் சம்மதிக்க மாட்டீர்கள். எனக்கு அது போதும் என்றாள் மீரா. தன் இசையை நேசிப்பவன் தான் வேண்டுமென்று சூட்சுமமாகச் சொல்லிவிட்டாள்.

முரளி உன்னிடம் ஒரு கேள்வி. அது உன் பர்சனல் பற்றியது. கேட்கலாமா? என்றாள் மீனாட்சி.

என்ன ஆன்ட்டி, என் பர்சனல் என்கிறீர்கள். என்னை உங்கள் இசைக் குடும்பத்தில் ஒருவனாகச் சேர்த்துக் கொள்ளவில்லையா? என்றான் முரளி.

அந்த உரிமையில்தான் உன்னிடம் ஒன்று கேட்கப் போகிறேன் என்றாள் மீனா.

தாராளமாய்க் கேளுங்கள் உங்களுக்கில்லாத உரிமையா? நான் தாய் தகப்பன் யார் என்றே அறியாமல் அநாதை ஆஸ்ரமத்தில் வளர்ந்தவன். உங்கள் உரிமை, அக்கறை எனக்குத் தேவை என்றான்.

உன் திருமணம் பற்றிய கேள்வியிது. எப்படிப்பட்ட பெண்ணை மணந்து கொள்வாய்?

இதில் எனக்குத் தனி விருப்பம் ஏதுமில்லை. ஆஸ்ரமத் தலைவர் என் தந்தை ஸ்தானத்தில் இருப்பவர். அவர்தான் முடிவு செய்வார். என் இசையார்வம் புரிந்த பெண் வேண்டும் என்று இறைவனிடம்தான் பிரார்த்திப்பேன் என்று அவனும் சூட்சுமமாகத் தன்னிசைப் பாதுகாப்பைக் கூறினான். நல்லதாயிற்று என்று மீராவை அழைத்து "மீரா உனக்கு முரளியை மணக்கச் சம்மதமா? என்றாள். முதலில் நீங்கள் அவரையல்லவா கேட்க வேண்டும்?" என்றாள் மீரா. முரளி உனக்கு மீராவைப் பிடித்திருக்கிறதா? என்று கேட்டதற்கு "அவர்களுக்குப் பிடித்திருக்கிறதா?" என்றான். சரி உங்களுக்கு இதில் விருப்பம் இல்லையென்றால் நான் வற்புறுத்தவில்லை என்றதும், இருவரும் ஏககாலத்தில் எனக்கு விருப்பமில்லை என்று நான் சொல்லவில்லையே என்றதும் மீனாவிற்குச் சிரிப்பு வந்தது. இருவரும் என்னிடம் மாட்டிக் கொண்டீர்களா என்று வம்பு செய்ய, இரண்டு இளம் உள்ளங்களும் அன்பும், ஆனந்தமும் பூரிக்க நாணத்துடன் சிரித்து நின்ற காட்சியை நீங்களே கற்பனை செய்து மகிழ்ந்து கொள்ளுங்கள்.

ஒருவாறு திருமணம் முடிவாயிற்று. பதிவுத் திருமணம் செய்தனர். மீனாட்சியும், சுந்தரமும் ஆஸ்ரமத் தலைவரும் ஆசி கூற ஆஸ்ரமத்தில் அங்குள்ளோர் முன்னிலையில் மாலை மாற்றிக் கொண்டனர். ஜீவனற்ற சம்பிரதாயச் சடங்குகள் ஏதுமின்றி ஆஸ்ரமத்திலுள்ளோர் அனைவர்க்கும் புதிய ஆடைகள் கொடுத்து அவர்களோடு சேர்ந்து மணமக்களும், மற்றவர்களும் விருந்து உண்ண ஏற்பாடு. ஆஸ்ரமவாசிகள் யாவரும் அன்று மாலை தங்களுக்காக மீராவும் முரளியும் அமுதகானம் வாசிக்க விரும்பிக் கேட்டனர். மணமக்களை வாழ்த்தி மற்றவர் இசை நிகழ்த்தும் பரம்பரை பழக்கம் மாறி மணமக்களே இசை நிகழ்த்தும் புதுமை நிகழ்ந்தது. அன்றைய இசை நிகழ்ச்சி இவர்களின் பொருத்தத்தை உலகிற்கு உணர்த்திற்று எனலாம்.

திருமணத்திற்குப் பிறகு உடனே குழந்தை, குடும்பம் என்று ஆகிவிடாமல் வாழ்வு தந்த இசைக்கு நன்றி செலுத்தும் முகமாக இருவரும் இரவுபகலாக பிற இசை (கர்நாடக சங்கீதம் அல்லாத) இந்துஸ்தானி போன்றவற்றையும் பயின்று ஒற்றுமை



வேற்றுமைகளைக் கண்டறிந்து அந்தந்த ராகங்கள் தரும் ரசம், பயனுக்கேற்றவாறு பாடல்களை முரளி இயற்ற அவற்றை மீரா பாடிக்காட்ட, பிறகு உலக அளவில் பிரச்சனையாக உள்ள சுமுகக் குறைவை நீக்குவதே குறிக்கோளாக பாடல் இயற்றி அவற்றைக் கேள்வி பதில்களாக அமைத்து ஒருவர் கேள்வியைத் தக்க இசையில் பாட, ஒருவர் பதிலைத் தக்க இசையில் பாட, நடுநிலை கருத்தை மீனாட்சி பாட இசையில் "சுமுகத்தை" பட்டிமன்றமாக அமைத்து மேடையேற்ற அமோக வரவேற்பு. இதன் பயனாய் சுமுகமும் வளரவாரம்பித்தது. இரண்டாண்டுகள் ஓயாது புதுப்பாடல்களை இயற்றி ராகம் பொருத்தமாக அமைத்து இடையில் இருவரும் ஸ்வரம் பாடும் அழகான அமைப்புகளுடன் இவர்கள் கச்சேரி களை கட்டியது. இவ்வாறு மீராவும் முரளியும் சேர்ந்து பல இசை நிகழ்ச்சிகளை நாடு முழுவதும் பரப்ப அயல்நாடுகளிலிருந்தும் அழைப்பு வர உலக ஒருமைப்பாடே குறிக்கோளாக எல்லா மொழிகளிலும் இசை நிகழ்ச்சிகள் நடத்தினர். இளம் வயதில் இசையில் சாதனை படைத்து பல விருதுகளை வென்ற முதல் தம்பதியினர் என்று அனைவரும் பாராட்டினர். எம்.எஸ். அவர்கள் நூற்றாண்டு விழாவின் சிறப்பு இசை நிகழ்ச்சியாக எம்.எஸ் அவர்களின் குரல்வளம், பக்தியுணர்வு அடக்கம் யாவும் குறித்த பாடலை முரளி இயற்றி மீனாட்சியே இசையமைத்து மீரா தன் அம்மா எம்.எஸ். அவர்கள் மீது கொண்ட அன்பின் அடையாளமாக ஓரிசை நிகழ்ச்சியில் பாட மீராவிற்குப் பாராட்டும் பரிசும் மேடையில் குவிய யாரும் சற்றும் எதிர்பாராத விதமாக மீனாட்சி சபையில் மீராவுக்கு எம்.எஸ் அவர்களிடம் மீராவின் தாய் பெற்ற எம்.எஸ்-இன் பொன்னாடையைப் போர்த்தி எம்.எஸ். அவர்களும், மீராவைப் பெற்றவளும் இச்சபையில் சூட்சுமமாக மீராவை வாழ்த்தியதாகக் கூற எல்லோரின் கண்களும் பனித்து நெஞ்சங்கள் நெகிழ்ந்தன.

மீரா கலைத்துறையில் சாதித்தாய். அதற்கு அளவில்லை. என் காலம் முடியும் முன் இந்த இசை குடும்ப வாரிசுகளை எப்போது பெற்றுத் தரப் போகிறாய் என்றாள் மீனாட்சி. மறவாமல் ஸ்ரீ அன்னையின் அருளுரைகளை மனத்தில் இருத்தி இலட்சியக் குழந்தையைப் பெற்றுத்தா என்றனர் மீனாட்சி தம்பதியினர்.

திருமணமான மூன்றாம் ஆண்டு மீரா கருவுற்றாள். குடும்பம் மகிழ்ச்சியில் திளைத்தது. மீராவின் வயிற்றுப் பிள்ளைக்கு மீனாட்சி காலையில் பூபாளம் இசைத்தாள். முரளி இரவில் நீலாம்பரி இசைத்தான். பகல் வேலைகளில் எல்லாவகை உணர்வுகளும் ஊட்டவல்ல சங்கராபரணம் பாடினாள் மீரா. சந்தோஷத்திற்கும், உற்சாகத்திற்கும் உகந்த பிலஹரி ராகத்தைச் சுந்தரம் பாட அனைவரும் வியந்தனர். சுந்தரம் இதுவரை வாயைத் திறந்து பாடியதேயில்லை. எப்படிங்க இது? என்று மீனாட்சி வியக்க கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடுமாமே. மீனாட்சி வீட்டுக் கைத்தடியும் பாடுகிறது என்று சுந்தரம் கூறிச் சிரிக்க வீடு ஆனந்த மயம் ஆயிற்று. ஒரு சுபயோக சுபதினத்தில் மலர்ந்தும் மலராத காலைப் பொழுதில் மீராவின் மகளாக, இசைக் குடும்ப ஏக வாரிசாக எம்.எஸ். பிறந்தார். தொட்டில் இட்டு குழந்தைக்கு இராகமாலிகா என்று பெயரிட்டு எம்.எஸ். (**My Sweety**) என்றே அழைத்தனர். ஐந்தாம் வயதில் குழந்தை மீரா முரளியின் இசை நிகழ்ச்சியின் நடுவே மழலையில் ஸ்வரம் பாடி அசத்தினாள்.

(விளையாட்டுப் பருவத்திலேயே எம்.எஸ். மேடையில் தன் அம்மாவுடன் பாடுவாராமே).

மீனாட்சி மனம் நிறைந்தாள். இசைக்கு ஒரு பள்ளி அமைத்து அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டாள். மீராவும் முரளியும் அதை இசைக் கல்லூரியாக வளர்த்து நாத பிரம்மத்திற்கு நாதத்தால் நன்றி செலுத்திய வண்ணம் உள்ளனர். குழந்தை எம்.எஸ்-இன் பேச்செல்லாம் இசை வாயிலாகவே நடை பெற்றது. இவளுக்காக இவளுடன் பேச ஆசைப்படுபவர்கள் இசையில் பேச (பாட) முயற்சி செய்தனர். இசை நயம் புரிந்தால் நாமும் எம்.எஸ். உடன் பேசலாம். முயற்சி செய்வோம் வாருங்கள்.

நன்றி அன்னையே.

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605 011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605 008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605 012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605 011.

## இறைவனே உலகமானார் - சிருஷ்டியின் Vote வாக்கு

*மன்னராட்சி போய் மக்களாட்சி வந்து அனைவருக்கும் ஓட்டுரிமை வந்தது.* ஓட்டுரிமை எந்தப் பதவியையும் பெற அவசியமானது, பெற்றுத் தரவல்லது. மோட்சம் தனிமனிதனுடைய ஆத்மாவுக்கு மனம், உயிர், உடல் என்ற சிறையிலிருந்து விடுதலை தருகிறது. மன்னராட்சியில் அரசபதவி அரச குடும்பத்தில் வாரிசு உரிமையுடன் பிறந்தவர்க்குரியது. *மற்றவர்க்கு அந்த வாய்ப்பில்லை.* புரட்சியால் அல்லது போர் நடந்து ஒரு மன்னர் போய் அடுத்த மன்னர் வந்தால், மன்னராட்சி நீடிக்கும். மக்கள் நிலையும் தொடரும். *மன்னர் ஆட்சி இந்தியாவில் மட்டுமல்ல, ஜப்பான், ஆப்ரிக்கா, ஐரோப்பா என உலகெங்கும் நிலவியது. 16-ஆம் நூற்றாண்டில் நிலைமை மாறி, மன்னராட்சி அழிந்து மக்களாட்சி இங்கிலாந்தில் வந்தது.* 1789-இல் பிரெஞ்சுப் புரட்சி அதே நிலையை அங்குக் கொண்டு வந்தாலும் அடுத்த 100 ஆண்டு மன்னரிருந்தார். 1917-இல் ரஷ்யப் புரட்சி மன்னராட்சியை அழித்தது. சைனா 1950-இல் அந்த நிலையை எதேச்சாதிகாரமாக ஹிட்லர், முசோலினி, ஸ்டாலின் போல மாற்றியது. ஒரு *சகாப்தம் முடிந்து அடுத்த சகாப்தம் ஏற்படும் மாறுதலிது.* ஆன்மிகத்தில் மோட்சம் மன்னராட்சி. பூரண யோகம் மக்களாட்சி. மன்னராட்சியை மக்களாட்சியாகப் பிரகடனம் செய்தது அரசியல் நிர்ணயச் சட்டம். *அதனடிப்படையில் பிரிட்டிஷ் இந்தியா, இந்தியக் குடியரசாகியது.* இறைவன் உலகைப் படைத்தான் என்பது மன்னராட்சியில் மன்னனுக்கு **(divine right)** தெய்வம் கொடுத்த உரிமை. இறைவனே உலகமானான் என்பது அரசியல் நிர்ணய சட்டம், மக்களுக்கு வாக்குரிமை கொடுத்தது. இந்த வாக்குரிமை எளிய மனிதனை எந்தப் பதவிக்கும் உயர்த்தவல்லது. *பூரண யோகம் தருவது ஆன்மிக சுதந்திரம். ஆன்மிக சுதந்திரம் வாழ்வில் செயல்பட்டால் மனிதன் இறைவனாகலாம்.*

## மனிதனும் மரமும் பரம்பொருள்

சர்வம் பிரம்மம் என்பது உபநிஷதம். நடைமுறையில் அதை ஆன்மிகம் பாராட்டவில்லை. பகவான் கூறும் உதாரணம் தங்கம். தங்கத்தால் செய்த பாத்திரம் உருமாறுகிறது. கட்டியான தங்கம் பாத்திரமாகிறது. மனிதன் தங்கப் பாத்திரம் தங்கமாகவே இருக்கிறது என்பதை மறந்து தங்கம் பாத்திரமாக மாறிவிட்டது, இனி தங்கம் அங்கில்லை என்பது சரியாகாது எனக் கூறுகிறார். ஒரு நடிகன் கதையில் ராஜா வேஷம் போட்டால், வேஷம் ராஜா, நடிகன் மாறவில்லை, மாற முடியாது என நாம் அறிவோம். கடல் ஒன்றே பல ஊர்களில் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டாலும் கடல் கடலாகவே இருக்கிறது என்பது தெளிவு. பிரம்மத்தை **Absolute** எனவும் உலகை **Relative** என்றும் விவரிக்கும் தத்துவம் இந்த மாற்றம் 1) ரூபத்திலும், 2) அளவிலும், 3) பொருளிலும், 4) செயலிலும், 5) அசைவிலும் 6) ஆனந்தத்திலும் மேலும் பலவகையாக மாறுவதை விளக்கமாகக் கூறிக் காரணம் காரியமாகிறது, இடையேயுள்ளது ஒரு தொடர்பு, உண்மையில் காரணமே காரியம், தொடர்பு இருக்கலாம், மறையலாம், அதனால் பிரம்மமே உலகம் எனக் கூறுகின்றனர். வாழ்வில் மரணம், நோய், துன்பம், தோல்வி ஆகியவை வாழ்வு, நலம், இன்பம், வெற்றிக்கு எதிரானவை என்று கூறி அவை தத்துவப்படி ஒன்று என்று விளக்குகிறது. மனிதப்பார்வை வேறுபடுத்திக் காணலாம். தெய்வீகப் பார்வைக்குத் துன்பம் இளவயது இன்பம் என யோக விளக்கம் எழுகிறது. **V.R.** கிருஷ்ண அய்யர் ஒரு வக்கீல், தொழிலாளர் தலைவர். கேரளாவில் கம்யூனிஸ்ட் மந்திரியானார். சுப்ரீம் கோர்ட் நீதிபதியானார். அவர் ஒரு சமயம் ஒரு கேள்வியை எழுப்பினார். ‘ஒரு இளைஞன் அறிவும், அனுபவமும் உள்ளவன் என அவனை வக்கீலாக இருப்பதை விட்டு முன்சீபாக நியமித்தால், எதிர்பார்த்த அளவு அறிவில்லையென சில சமயம் தெரியும். பதவி உயர்வால் அவன் சுப்ரீம் கோர்ட் நீதிபதியானால் அவன் அறிவு வளர்ந்து விட்டது என ஏற்பது எப்படி அறிவுடைமையாகும்’ என்றார். மனிதன் பரம்பொருள், மரமும் பரம்பொருள், அனைத்தும் பரம்பொருளாகும். சர்வம் பிரம்மம்.